மலைமுரசினை வலைப்பக்கத்தில் (Website) வாசிக்க:
www.sltrinco.com

உங்கள் பிரதேச செய்திகளை உடனுக்குடன் மலைமுரசுக்கு தெரிவியுங்கள்
malaimurasu@hotmail.com
075 42 52 042

புரட்டாதி மாதம் 21ம் திகதி

October 07, 2012

# மலைமுரசு

MALAIMURASU

அறைவு 01 இயம் 11

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

விலை – 20.00 பக்கங்கள் – 10 பிரதி ஞாயிறு தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் வார இதழ்


# திருக்கோணமலையில் "புத்தாக்கக் கம்பீரக் கண்காட்சி" – 2012

## Smart Expo - 2012

(கதிரவன், ஸ்ரீ)






திருக்கோணமலை வலயக் கல்விப் பணிமனையின் ஏற்பாட்டில் புனித மரியாள் கல்லூரியில் "புத்தாக்கக் கம்பீரக் கண்காட்சி -2012' என்ற தலைப்பில் கண்காட்சியொன்று 03.10.2012 தொடக்கம் 04.10.2012 வரை இரு நாட்கள் நடந்தேறியுள்ளது. திருக்கோணமலை வலயக் கல்விப் பணிபபாளர் திரு. ந. விஜயேந்திரன் தலைமையில் 20 அதிபர்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட குழுவே இக் கண்காட்சியின் ஏற்பாட்டுப் பொறுப்பை ஏற்றிருந்தது.

கிழக்கு மாகாண கல்வி, பண்பாடு, காணி, காணி அபிவிருத்தி போக்குவரத்து அமைச்சின் செயலாளர் ஏ.புஸ்பகுமார பிரதம அதிதியாகவும் பிரதிச் செயலாளர் எம்.ரீ.ஏ. நிசாம், மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஈ. போல் கௌரவ விருந்தினர்களாகவும் இக் கண்காட்சியில் கலந்து கொண்டனர்.

இக்கண்காட்சினை ஆரம்பித்து வைப்பதற்காக அதிதிகள் உட்பட பாடசாலையின் அதிபர்கள், விருந்தினர்கள் ஆகியோர் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியிலிருந்து ஊர்வலமாக கடற்படைத் தள வீதியூடாக புனித மரியாள் கல்லூரிக்கு அழைத்து வரப்பட்டனர். இவ் ஊர்வலத்தில் பாடசாலைகளிலிருந்து தேர்வுசெய்யப்பட்ட வாத்தியக் குழுக்கள் இசைவழங்க, பாடசாலைகளின் பல்வர்ணக் கொடிதாங்கிய மாணவமணிகள் இருபுறமும் அணிவகுக்க, இடைநடுவே கலாசாரப் பாரம்பரியங்களை நினைவு படுத்தும் முகமான நாட்டியங்கள் அரங்கேற ஊர்வலம் புனித மரியாள் கல்லூரியை வந்தடைந்தது.

இக் கண்காட்சியில் திருக்கோணமலை வலயத்திற் குட்பட்ட பாடசாலைகளின் மாணவர்களின் ஆக்கங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

(10ம் பக்கம் பார்க்க)

## பெருந்தெரு விக்நேஸ்வராவில் கொள்ளை

திருக்கோணமலை நகரத்திலமைந்துள்ள பெருந்தெரு விக்நேஸ்வரா மகாவித்தியாலயத்தில் பல்லூடகக் கருவிகள் (Multi-Media set) களவு போயிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சுமார் மூன்று லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான பல்லூடகக் கருவிகளே தொலைந்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது. இவ்வாரத்தில் பாடசாலையின் தேவையொன்றுக்காக இக் கருவிகளைத் தேடத் தொடங்கியபோது அவையாவும் ஒருசேரக் களவு போயிருப்பது பாடசாலை நிர்வாகத்திற்குத் தெரிய வந்துள்ளது. படப் பெரிதாக்கி

(10ம் பக்கம் பார்க்க)

## குடும்பத் தகராறினால் கொலையுண்டது குழந்தை

### கொலையாளியும் தற்கொலை





திருக்கோணமலையின் திரியாயில் ஏத்தனடிக் கிராமத்தில் குழந்தையொன்று கொலையுண்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. எட்டு வயதான இளம் குருத்தே குடும்பத் தகராறினால் கொலையாகியுள்ளார். இக் கொலை உலகலாவிய ரீதியில் சர்வதேசக் குழந்தைகள் தினம் கொண்டாடப்பட்ட நாளில்

(10ம் பக்கம் பார்க்க)

## ஹக்கீமின் முடிவை ஏற்றுக் கொள்ளாத பெரும்பான்மை வாக்காளர்கள்.



இலங்கையின் பிரபல்ய மான ஆங்கில வார இதழான சண்டே டைம்ஸ் தனது இலத்திரனியல் வாசகர்களிடையே ஹக்கீமின் கிழக்கு மாகாண சபை முடிவு தொடர் பான கருத்துக் கணிப்பை நடாத்தியிருந்தது. அவ்

(10ம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீவாணி வித்தியாலயத்தின் உள்ளகக் கட்டுமான விருத்திப் பணிகள் நிறைவுற்றன.



(கதிரவன்)

அரசாங்கத்தின் 5000 ஆரம்ப பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டத்தின் கீழ் செய்யப்பட்ட அபிவிருத்தி பணிகளைத்

(10ம் பக்கம் பார்க்க)


## கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலச் சான்றிதழ்கள்

வெளிநாடு செல்வதற்கு சர்வதேசத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்

ஆங்கில கற்கை நெறி

உயர்தரம் படித்துவிட்டு பெறுபேறுகளுக்காய்க் காத்திருக்கும் உங்களுக்காக முழுநேர பகுதிநேர வகுப்புக்கள்

READING
WRITING
LISTENING
SPEAKING

KET - KEY ENGLISH TEST

PET - PRELIMINARY ENGLISH TEST

NEW INTAKE NOW OPEN FOR FEBRUARY 2013 EXAM

Veal Business College, No.159A Seaview Road, Trincomalee. T.P 026 2227622


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு

159A, 2ஆம் மாடி, கடல் முக வீதி,
திருககோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042

## வணக்கம் !

கடந்த 01.10.2012ல் நாமெல்லாம் சிறுவர் தினத்தை சந்தோசமாகக் கொண்டாடினோம். ஆனால் எம் மண்ணின் இளங் குருத் தொன்று அன்நாளில் அயலவனால் கொலை செய்யப்பட்டு திரியாய் பிரதேசத்தில் இறந்திருந்தது. உலகம் முழுவதுமே குழந்தைகளுக்கெதிரான வன்முறைகள் மிக அதிகரித்திருப்பதை நாம் தெரிந்துகொண்டு வருகின்றோம். அதற்கான முக்கிய காரணிகளாக சிறுவர்களை ஆபாச படங்களில் காட்டத் தொடங்கியுள்ள வலைப்பக்கங்களையும், சிறுவர்களை பலி தீர்க்கும் கருவிகளாகக் காட்ட முனைகின்ற இந்தியத் தொலைக்காட்சித் தொடர்களையுமே கருத வேண்டியுள்ளது.

குழந்தைகளை தெய்வங்களாகக் கொண்டாடிய காலங்கள் போய் அவர்களை நாங்கள் எமது எல்லாத் தேவைகளுக்கும் பயன்படுத்தும் நிலை தோன்றியுள்ளது. குழந்தைகள் குழந்தைகளாகவேயிருக்க மனிதர்கள் மிருகங்களாகிப் போன கேவலமான வாழ்நாட்களில் நாம் ஒவ்வொருவரும் குழந்தைகள் தொடர்பான எமது பொறுப்புக்களை தெளிவாக வரையறுத்துக் கொள்ளவேண்டி யேற்பட்டுள்ளது. உறவுகளால் வதைபடும் குழந்தைகளே எம்முள் அதிகம்.

திருக்கோணமலையில் பொதுவாக " மாமா " எனும் சொல்லும் " அண்ணா " எனும் சொல்லும் உறவற்றவர்களை அழைப்பதற்குப் பயன்படுவதை நாம் காண்கின்றோம். இவ்விரு சொற்களுமே குழந்தைகளின் மனதில் உறவற்றவர்களைக் கூட உறவாகக் கொள்ளும் மனநிலையை வளர்த்து விடுகின்றன. "ஆட்டோ மாமா" என்னும் சொல் எம் குழந்தைகளின் மனதில் எவ்வளவு ஆழமாய்ப் பதிந்துள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள் தானே. எனினும் அச் சொல்லினால் எவ்விதமான நம்பிக்கைகளையும் எமது செல்லக் குழந்தைகளின் மனதில் உருவாக்காதிருக்க நாம் முயற்சித்தே ஆக வேண்டும். அயலவரின் வயதான மகன்களை நாம் அண்ணா என அழைப்பதில் அபத்தம் எதுவும் இல்லை. ஆனால் அயல்வீட்டு அண்ணாவால் குதறப்பட்ட குழந்தைகள் எத்தனை?

எனவே நாம் செய்ய வேண்டியது எல்லாமே குழந்தைகளை இடைவிடாது எமது கவனிப்பில் வைத்திருப்பதுடன் ஆபத்தை எல்லாம் அவர்களுக்குத் தெரியப்படுத்தி வைத்திருப்பது தான். யாரையும் நம்பாமலிருப்பது என்பது ஒரு நோய்தான். ஆனால் எல்லோரையும் நம்பிவிடுவதும் ஒரு நோய்தானே?

உறவற்றவர்களையும், ஏன் உறவுள்ளவரையும் கூட எல்லையிட்டு வைத்திருப்பதில் தப்பேதுமில்லை என்றே எண்ணத் தோன்றுகின்றது. எனில் அவ் எல்லை எது என்பதை நாம் ஒவ்வொருவரும் எமது வாழ்நிலைக் கேற்பவே எமது குழந்தைகளுக்குச் சொல்லித்தருவோமே.

சொல்லித் தருவோமா?

-ஆசிரியர்-

வியாபாரம் பெருக்க விளம்பரம் செய்யுங்கள். வர்ண விளம்பரங்களும் ஏற்றுக்கொள்ளப்படும்

## உப்புவெளி பொது நூலகத்தில் ஆலோசனைக்கூட்டம்

(பிரபாலினி)

திருக்கோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபையின் உப்புவெளி பொது நூலகத்தின் நூலக ஆலோசனைக் கூட்டம் கௌரவ தலைவர் இ.விஜேந்திரன் அவர்கள் தலைமையில் 29.09.2012 சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நூலக உசாத்துணைப் பிரிவில் நடைபெற்றது. நூலகர் திருமதி கா. இராஜேஸ்வரிசிங்கம் அவர்கள் வரவேற்பு உரையில் தேசிய வாசிப்பு மாதத்தை யிட்டு நடத்தப்படுகின்ற புத்தக கண்காட்சி பற்றியும் 2013 க்குரிய நூலகம் மேலும் திறன்பட செயலாற்றும் உறுப்பினருடன் அமைக்கவேண்டும் என்றும் கூறிய மர்ந்தார். தலைவர் தனது உரையில் நூலகத்திற்கு கொள்வனவு செய்யப்பட்ட புதிய நூல்கள் மாணவர்களின் தேவையை அறிந்து கொள்ளனவு செய்யப்பட்டது வரவேற்கத்தக்கது என்று விளம்பிய பின் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகள் பற்றிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இக் கூட்டத்தில் நூலக ஆலோசனைக்குழு உறுப்பினர்கள், மாதுமை அம்பாள் வித்தியாலய அதிபர் V. செல்வநாயகம், சனசமூக உத்தியோகத்தர் திருமதி வசந்தி ஜெயராஜ், செல்வநாயகபுரம் தமிழ் வித்தியாலய ஆசிரியர், நூலக ஊழியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ஈச்சந்தீவு விபுலானந்தாவின் புலமைப் பரிசில் முடிகள்



அண்மையில் வெளியான தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகளின் படி கிண்ணியா கல்வி வலயத்தின் ஈச்சந்தீவு விபுலாநந்தா வித்தியாலயத்தில் இருந்து தோற்றிய 11 மாணவர்களில் 8 மாணவர்கள் 147 என்ற தகைமைப் புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். வி.அபிநயா172, சே.நிவேதிகா 160, ச.அனோஜன் 160, ந.திலக்சனா 159, ர.தக்சலா 156, வி.கிருஷாந்தி 155, யோ.பிருத்தியா 150, ம.வினுஸ்கரன் 158 ஆகியோரே இவ்வாறு தகைமை பெற்றவர்களாவர். இப்பாடசாலையில் 2011 ஆம் வருடம் 3 மாணவர்களும், 2010 ஆம் வருடம் 4 மாணவர்களும், 2009 ஆம் வருடம் 2 மாணவர்களும், 2008 ஆம் வருடம் 5 மாணவர்களும் தகைமை பெற்றிருந்தனர்.

## மலைமுரசின் முகப்புத்தகத்திலிருந்து (Facebook) ஓர் மனப்பதிவு

(கே.எஸ்)

"200, 500, 1000 என தாராளமா உதவுங்கோ...."
திருக்கோணமலையின் பிள்ளையார் கோவில் ஒன்றில் கடந்த சில மாதங்களாக ஓயாது ஒலித்துக்கொண்டிருக்கும் ஓசையிது...

ஆலயத்தில் கோபுரம் அமைப்பதற்கான நிதி சேகரிப்புப் பணிக்கமர்த்தப் பட்டுள்ள ஒருவர் சொல்லிக் கொண்டிருப்பதே மேற்சொல்லப்பட்டுள்ள வாசகம்...

குறித்த பிதேசத்தின் பெருமையை துலங்கச் செய்வது ஆலயங்களே. இது எவராலும் மறுக்கப்படாதது... அதிலும் விசாலமான பிரமாணம், இராஜகோபுரம் என்பன அப்பிரதேசத்தின் செழிப்பையும் வாழும் மக்களின் வளத்தையும் நிச்சயம் உயர்த்திக் காட்டும் ஒரு குறிகாட்டியே.

அந்த வகையில் புகழ் பெற்ற எம் விநாயகர் ஆலயமும் கோபுரத்துடன் நிமிர்ந்து நிற்பது எம்மனைவர்க்கும் பெருமையே.. பலஆலயங்களின் பணிகள் மக்களின் முழுப்பங்களிப் புடனேயே நடைபெறுவது புதிய விடயமொன்றுமல்ல.. அவ்வாறே இவ்வாலயத்திற்கும் மக்களின் பங்களிப்பு விநாயகரின் திருவருளால் கிட்டும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை..

ஆனால் இங்கு நன்கொடை பெறும் விதம் எனக்கு மன நெருடலாக இருக்கின்றது.... ஆலயத்துக்கு ஏதோ ஒரு மன அமைதியை வேண்டியே செல்கின்றோம்.. அங்கே தினம் கேட்கும் இவ்வொலி ஏதோ ஒரு அசௌகரியத்தை ஏற்படுத்துகின்றது. முதல் தடவை கேட்கும் போது பரவாயில்லை போன்றிருந்தது..இப்போது அவ்வொலியைக் கேட்கும் போது வெறுப்பை ஏற்படுத்துகின்றது.."

## வாசிப்பு மாத போட்டி நிகழ்ச்சிகள் ஆரம்பம்.

(பிரபாலினி)

தேசிய வாசிப்பு மாத த்தை முன்னிட்டு உப்புவெளி போது நூலகம், பாடசாலை மாணவர்களுக்கான போட்டி நிகழ்ச்சிகளை நடாத்துகின்றது. 06.10.2012 தொடங்கிய இப் போட்டிகளில் தரம் 5 தொடக்கம் தரம் 13 வரையிலான மாணவர்கள் பங்குபற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேலும் வரோதயநகர், லிங்க நகர், கன்னியா போன்ற பகுதிகளில் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கு முகமாக நடமாடும் சேவைகளும் மேற் கொள்ளப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## காற்றழித்த வீடுகளைப் பார்வையிட்டார் மகாண முதல்வர்.

(பெரோஸ்கான்)

கடந்த 28-09-2012 (வெள்ளிக்கிழமை) கிண்ணியா மணியரசன் குளம் பகுதியில் பலத்த காற்றுடன் கடும் மழை பெய்தது.

(10ம் பக்கம் பார்க்க)

## குணா கல்வி நிலைய புலமைப்பரிசில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான பாரட்டுவிழா

(மதி)

5ம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் குணா கல்வி நிலைய மாணவர்கள் திறமையான சித்தியை பெற்றுள்ளனர். 2012ம் ஆண்டு இக் கல்வி நிலையத்தில் தரம் 5ல் கல்வி பயின்ற 20 மாணவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றி 9 மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்குக் கூடிய புள்ளிகளையும் ஏனைய 5 மாணவர்கள் 100 ற்கு, மேற்பட்ட புள்ளிகளையும் எஞ்சிய மாணவ்ர்கள் 75 ற்கு மேற்பட்ட புள்ளிகளையும் பெற்று சித்தியடைந்துள்ளனர். இவர்களைக் கற்பித்த ஆசிரியர்கள். ஜனாப் S.A. சத்தார், திரு A.சுரேந்திரன், திருமதி. R.கமலா, திரு. க. சதீஷ்குமார் ஆகியோர்களாவர். இம் மாணவர்களுக்கான பாராட்டு விழா எதிர்வரும் 14.10.2012 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு திருக்கோணமலை

(10ம் பக்கம் பார்க்க)

## நடந்தேறியது பௌர்ணமி தின "நீங்களும் எழுதலாம்" நிகழ்வு

கடந்த 29.09.2012 பௌர்ணமி தினத்தன்று நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 'பௌர்ணமி தினநிகழ்வு' தி/பெருந்தெரு விக்நேஸ்வரா மகா வித்தியாலயத்தில் இடம் பெற்றது.

மாலை 4.00 மணியளவில் இடம் பெற்ற இந்நிகழ்விலே 'இனியாவது ஒரு விதி செய்வோம்' எனும் தொனிப் பொருளில் நிலாவெளியூர் கெஜதர்மா அவர்களின் தலைமையில் கவியரங்கம் இடம்பெற்றது. அதில் செல்வி. ஞா. ஆன்கியூரின், திருமதி. வி.எஸ்தர், செல்வன். சென். ஹரிராம் திரு. பார்த்திபன், செல்வன்.சி.தேனுஷன், செல்வன். பெ.பத்மபிரஷன், திரு.செல்வரட்ணம் ஆகியோர் தம் கவிதைகளை வாசித்தனர்.

கவியரங்கம் பற்றிய தம் கருத்தாடல்களை சிரேஷ்ட சட்டத்தரணி ஆ.ஜெகசோதி, தி/மெதடிஸ்த பெண்கள் பாடசாலை ஆசிரியர் திருமதி.சௌ. சந்திரகலா ஆகியோர் நிகழ்த்திய பின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவுற்றது.

## திருக்கோணேஸ்வரத்திலிருந்து வெருகல் நோக்கி நடைபயிலும் வேல்



11வது வருடமாக திருக்கோணேஸ்வரத்திலிருந்து புறப்பட்டு வெருகல் நோக்கிய பயணத்தை வேல் நடை பஜனைக் குழுவினர் மேற்கொண்டனர். திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் ஆதரவுடன் ஸ்ரீ முருகன் சபையினரும் கலந்து பஜனையுடன் இவ் வேல் நடைப் பயணம் 29.09.2012 சனிக்கிழமை அன்று நடைபெற்றது. திருக்கோணேஸ்வரத்திலிருந்து புறப்பட்ட வேல் தாங்கிய பஜனைக் குழுவினர் ஸ்ரீபத்திரகாளி அம்மன் கோவில், ஆலடி விநாயகர் ஆலயம் ஆகியவற்றைத் தரிசித்து புறப்பட்டனர். ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்திலிருந்து மங்கள வாத்தியங்களும் சேர்த்துக் கொண்டனர். பின் ஸ்ரீ ரெட்ணசிங்கப் பிள்ளையார் ஆலயத்தைத் தரிசித்து நடந்து சென்ற பஜனைக் குழுவினரை வாசலில் பூரண கும்பம் வைத்து வீதிதோறும் மக்கள் வரவேற்றமை கண்ணுக்கு விருந்தாக அமைந்திருந்தது.

பொது மக்களுடன் சேர்த்து குணா கல்வி நிலைய அறநெறி மாணவர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். இறுதியாக வில்லூண்டி கந்தசாமி கோவிலைச் சென்றடைந்தனர் வேல் தாங்கிய குழுவினர். ஸ்ரீமுருகன் தொண்டர் சபையிலே இறுதியாக நடைபெற்ற கூட்டத்திலே திரு.செல்வஜோதி அவர்கள் உரையாற்றும் போது தங்கள் 10 வருட நடை பஜனையில்

(10ம் பக்கம் பார்க்க) (மதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொட்டியாரம் வரலாற்று அறிமுகம்

சென்ற வார தொடர்ச்சி

ஜயவீரபண்டாரனுக்கும், விமலதர்மனுக்கும் அரசுரிமைப்போட்டி ஏற்பட்ட போது ஜயவீரனுக்கு ஆதரவாக கொட்டியார வன்னிபம் 7,980 போர் வீரர்களையும், 600 கூலியாட்களையும், 1000 பொதி மாடுகளையும், 30 போர் யானைகளையும், 25 அலியன் யானைகளையும் அனுப்பி வைத்தான் என்று சொல்லப்படுகிறது.

கி.பி 1611ம் ஆண்டு போர்த்துக்கேயருக்கெதிராக சிற்றரசுகளின் கூட்டமொன்றை கூட்டிய போது அக்கூட்டத்தில் கொட்டியாரப் பற்றின் வன்னிபமான இடலி கலந்துகொண்டதாகக் குறிப்புக்கள்



உள்ளன. கி.பி 1613ம் கண்டிராஜனின் இளவரசனை அழைத்து வரும் பொறுப்பு கொட்டியாரம் வன்னிபத்திடம் வழங்கப் பட்டிருந்த மைக்கான சான்றுகளும் காணப்படுகின்றன. இரண்டாம் இராஜசிங்கன் கண்டி மன்னனாக ஆட்சி செய்த காலத்தில் இளஞ்சிங்கன் என்பவன் கொட்டியாரம் வன்னிபமாக விளங்கியுள்ளமையை அறிய முடிகிறது. திருக்கோணமலை பற்றிய ஒல்லாந்தத் தளபதியின் குறிப்பில் கொட்டியாரப் பற்றில் நிலவிய அரசு பற்றிய செய்திகள் உள்ளன. கண்டி அரசனால் சிறைப்பிடிக்கப்பட்ட றொபட் நொக்சின் குறிப்புக்களும் கொட்டியாரப்பற்றில் நிலவிய அரசு பற்றிய குறிப்புக்களில் அடங்கியுள்ளது.

**"வெருகல் சித்திரவேலாயுதர் காதல்" நூல் தரும் வரலாற்றுப் பதிவுகள்**

தம்பலகாமம் வீரக்கோன் முதலியார் எழுதிய இந்த நூல் வெருகல் கோயிலில் அரங்கேற்றம் செய்யப்பட்ட மையை பின்வருமாறு கூறுகிறது.

"துன்னுமிரு மரபுந் துய்யவிளஞ் சிங்கமெனும்
வன்னிமை பொற்பாதம் வணங்கயினி சொல்லாதை
வன்னிமை தேசத்தார் மகாநாடு தான் கூட்டி
மின்னுமெழில் மண்டபத்தில் வீற்றிருக்கும் வேளையில்
கோதில் புகழ் சேர் வீரக்கோன் முதலிதானியற்றுங்
காதவரங்கேற்றுகையிற் காதரனைச் சொல்லாதை"


இதில் வருகின்ற தேசத்தார் மகாநாடு என்ற சொற்றொடர் மிக முக்கியமான வரலாற்றுச் செய்தியாக உள்ளது. கொட்டியாரம் ஒரு தேசமாகக் கருதப் பட்டமைக்கான சான்று இங்குள்ளது. தேசத்தின் என்னும் போது கொட்டியாரம் ஏழு ஊர்களாகப் பிரிக்கப்பட்டு ஏழு அடப்பன் மார்கள் நியமிக்கப்பட்டு பரிபாலனம் செய்யப்பட்டமைக்கான சான்றுகளை நாம் கங்குவேலி கல் வெட்டில் காணமுடியும்.

கட்டைப்பறிச்சான் சேனையூரில் அடப்பன் முறை அண்மைக்காலம் வரை நடைமுறையில் இருந்தமையை இதன் தொடர்ச்சியாகக் கொள்ளலாம். வெருகல் சித்திர வேலாயுத கோயிலின் வருடாந்தர திருவிழாவில் 15ம் திருவிழா சேனையூர் கட்டைப்பறிச்சானுக்குரியது. இத்திரு விழாவை 1980ம் ஆண்டு பொது நிர்வாகத்தவர் பொறுப்பெடுக்கும் வரை சேனையூரின் கடைசி அடப்பனாக இருந்தவருடைய மகன் வீரக்குட்டி அவர்களே பொறுப்பாக இருந்தார் என்பது அடப்பன் முறையின் முக்கிய குறிப்பாகும்.

பிரித்தானியருடைய பரிபால னத்தின் கீழிருந்த போது உள்ளூர் முறைமைகளை அவர்கள் பின்பற்றி யிருந்தனர். அடப்பன் உடையார் என தம் ஆட்சிக்கு துணையாக அவர்களை வைத்திருந்தமையும் இங்கு கவனிக்கத் தக்கது. 1970 களில் புதிய நிர்வாக முறை அறிமுகப்படுத்தும் வரை கொட்டியார ப்பற்று காரியதிகாரி எனும் அரச நிர்வாக முறைமையே இருந்தது. அரசியல் ரீதியாக பாராளுமன்ற தேர்தல்கள் நடைமுறையில் மூதூர் இரட்டை அங்கத்தவர் தொகுதியாக இருந்த பொழுது தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழரசுக்கட்சியில் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் மாறிமாறி தெரிவாகினர்.

1970ம் ஆண்டிலேயே முதன் முதலாக கொட்டியாரப்பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் பாராளுமன்ற உறுப் பினராக முடிந்தது. கிளிவெட்டியைச் சேர்ந்தவரும் கொட்டியாரத்தின் முதலாவது அரசியல் தலைவனாகவும் வெளிப்பட்ட திருவாளர் அ. தங்கத்துரை பாராளுமன்ற அங்கத்தவராகத் தெரிவுசெய்ய பட்டார்.

அரசியல் ரீதியாக தமிழர் கூட்டணியின் உபதலைவராக மூதூரின் திருவாளர் அருளப்பு ஜயா அவர்கள் இருந்தமையும் பின்நாட்களில் அவருடைய மகன் அந்தோனி டொக்டர் தமிழர் கூட்டணியின் செயற்குழுவில் முக்கிய உறுப்பினராகச் செயற்பட்ட மையும் கொட்டியாரப்பற்றின் அரசியல் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தி நிற்கின்றன.



பேராசிரியர் பால சுகுமார்

## லிங்கநகரில் மழைநீர் தெருவழியே ஓடும் அவலம்.



சுமார் நான்கு வருடங்களுக்கு முன் லிங்கநகரில் அமைக்க ப்பட்ட தெரு வடிகால மைப்புக் காண்கள் மண் நிரம்பி அடைபட்டுக் கிடக்கின்றன. இதனால் கழிவு நீர் தேங்கி நாற்ற மடிப்பதுடன் நுளம்புகளின் பெருக்கத்திற்கும் வழிகோலுகின்றது. அண்மைய நாட்களில் பெய்த மழையின் போது தெருக் காண்கள் நிரம்பி தெருவிற்கு மழைநீரையும் கழிவு நீரையும் ஒரு சேர அனுப்பியதைப் பார்க்க முடிந்தது. இதனால் நடந்து செல்லும் பெருமளவிலான மக்கள் பெரும் அவஸ்தைக்குள்ளாகியிருந்தனர். இனி வரும் காலம் மழைகாலமாக இருப்பதால் இவ் அவஸ்தை இன்னும் அதிகரிக்கப் போவதாகவும் அவர்கள் விசனம் தெரி வித்தனர்.

இப்பிரச்சனைக்கு உடனடியாகத் தீர்வைப் பெற்றுத்தருமாறு பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# சிறு துரும்பும் எமக்கு உதவி செய்யும்

- பரோநிமி -

அந்த நாட்டு ராஜாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. எப்போதும் யோசித்தபடியே இருந்தார். அவர் அப்படியிருக்க என்ன காரணம் தெரியுமா? எதிரி நாட்டு அரசனின் தொல்லைதான். எதிரி நாட்டு அரசன் நம் ராஜாவை போருக்கு அழைத்து ள்ளான். அதற்காகவா எமது ராஜா யோசனையிலுள்ளார்.....? ராஜாவுக்கு எதிரி நாட்டு படையைக் கண்டு அச்சமாக இருந்தது. ஏன் என்று தெரியுமா? எதிரி நாட்டு அரசனிடம் உள்ள பட்டத்து யானைதான் அதற்குக் காரணம். அந்த யானைக்கு ஏன் பயப்பட வேண்டும்..? அது சாதாரண யானையல்ல ஆயிரம் எதிரிகளை வீழ்த்தக் கூடியது. நம் ராஜாவின் படையை எதிரி நாட்டு யானை ஒரு நொடியில் வீழ்த்தி விடும். இது ராஜாவுக்கு தெரியும். அதுதான் என்ன செய்வதென்று தெரியாமல் யோசித்தபடியே இருக்கிறார்.

ராஜாவுக்கு மிருகங்கள், பறவைகள், பூச்சியினங்கள் என்று அனைத்து உயிரினங்களும் பேசும் பாஷை புரியும். இவ்வாறிருக்கையில் ராஜாவுக்கு ஒரு யோசனை வந்தது. அது என்ன..? காட்டுக்குச் சென்று அங்குள்ள மிருகங்களின் உதவியைக் கேட்கலாமா...? என்று எண்ணினார். உடனே காட்டுக்குச் சென்றார். சிங்கங்கள், யானைகள், குதிரைகள் போன்ற பல மிருகங்களை சந்தித்தார். முதலில் அவைகள் நம் ராஜாவை தாக்க வந்தது. நம் ராஜாவுக்குத்தானே பிராணிகள் பேசும் வார்த்தைகள் தெரியும். அதனை வைத்துக் கொண்டு மிருகங்களுடன் கதைத்தார். அவைகளும் ராஜாவின் நல்ல எண்ணத்தை புரிந்து கொண்டன. ராஜாவுக்கு துணையாக இருக்க சம்மதித்தன. இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தது ஒரு சிறிய எறும்பு.

எறும்பிற்கும் ராஜாவுடன் சேர்ந்து போருக்கு செல்லவேண்டும் என்று




ஆசைப்பட்டது. என்ன செய்வது பாவம் எறும்பால் சண்டை பிடிக்க முடியுமா? எறும்பை யாரும் சண்டையில் சேர்த்துக் கொள்வார்களா? சரி முயற்சி செய்து பார்ப்போமே என்று எறும்பு நினைத்தது. ராஜாவும் மற்றைய மிருகங்களும் போருக்கு தயாராகிக் கொண்டிருந்தன. அப்போது எறும்பு ராஜாவிடம் வந்தது. 'ராஜா... ராஜா... நானும் உங்களோடு போருக்கு வரலாமா? என்னால் முடிந்த உதவிகளை நான் நிச்சயம் செய்வேன்..... என்னையும் அழைத்துச் செல்லுங்க ளேன்.....' என்றது. இதைக் கேட்ட மற்றைய மிருகங்கள் உரத்துச் சத்தம் போட்டு சிரிக்கத் தொடங்கின. 'சிறியவ னான நீ போருக்கு வரப்போகிறியா?.... என்ன எறும்பே உயிர் வாழ்வதில் விருப்பமில்லையா.... என சத்தமிட்டன. எறும்பிற்கு அழுகை வந்தது. எறும்பு அழுவதை ராஜா பார்த்தார் அவருக்குப் பாவமாக இருந்தது. சரி எறும்பையும் போருக்கு அழைத்துச் செல்வோம் என்று எண்ணினார். எறும்பை தனது சட்டைப் பையினுள் வைத்துக் கொண்டார். போருக்கு புறப்படலானார். எல்லா மிருகங்களும் 'எதிரி நாட்டு அரசனையும் அவனது யானையையும் வீழ்த்துவோம்......' என்று சத்தமிட்டன. போர்களத்துக்கு அனைவரும் வந்து சேர்ந்தனர். சங்கு ஒலித்தது. போர் தொடங்கியது. நேரம் போகப் போக எதிரி நாட்டு அரசர் தமது பட்டத்து யானை யால் வெற்றி பெறத்தொடங்கினர். நமது ராஜாவோ தோல்வியடைந்து கொண்டே சென்றார். நம் ராஜாவின் பக்கமுள்ள மிருகங்கள் சோர்வடைய தொடங்கின. ராஜாவுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. எதிரி அரசருக்கோ சந்தோஷம் கூடிக் கொண்டே இருந்தது. போரில் நடந்ததையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த சிறிய எறும்பு ராஜாவின் காதினருகே சென்றது. 'ராஜா நான் போகிறேன் கவலை கொள்ளாதீர்கள்' ..................ல் ஏதும் செய்ய முடியாது என்று ராஜாவுக்குத் தெரியும். இருந்தும் என்ன செய்வது எறும்பைப் போரிடச் சொன்னார். எறும்பு மெதுவாக கீழே இறங்கியது. மெல்ல மெல்ல எதிரி நாட்டு அரசரின் பட்டத்து யானையாரிடம் சென்றது. மெதுவாக யானையின் காதினுள் புகுந்து கொண்டது. யானையின் காதில் புகுந்த எறும்பு என்ன செய்தது தெரியுமா...? அதன் காதினுள் கடிக்கத் தொடங்கியது. எதிரி அரசனின் யானைக்கு வலி பொறுக்க முடியவில்லை. மதம் பிடித்தது போல் ஓடத்தொடங்கியது யானை. வலி தாங்க முடியாமல் தமது படைகளையே காலால் நசுக்கத் தொடங்கியது. முடிவில் தன்னைத் தானே மாய்த்துக் கொண்டது. பிறகென்ன வெற்றி எமது ராஜாவுக்குத் தான். இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த நம் நாட்டு ராஜாவின் படைகள் எறும்பின் செயலைப் பார்த்து ஆச்சரியமடைந்தன. ராஜாவும் எறும்பின் செயலைப் பாராட்டினார். எறும்புக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. ராஜாவுக்கு அப்போது ஒரு உண்மை புரிந்தது. என்ன தெரியுமா? சிறு துரும்பு என்று எதையும் ஒதுக்காமல் தேவையேற்படும் போது அதனையும் பாவிக்க வேண்டும் என்று.

**உலகிலே மிகப் பெரியவை**

1. மிகப் பெரிய நாடு - ரஷ்யா
2. மிகப் பெரிய காடு - அமேசன் காடு
3. மிகப் பெரிய நதி - நைல் நதி
4. மிகப் பெரிய நீர்வீழ்ச்சி - நயாகரா
5. மிகப் பெரிய மலை - எவரெஸ்ட்
6. மிகப் பெரிய பாலைவனம் - சகாரா
7. மிகப் பெரிய கண்டம் - ஆசியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகநூலில் ஒரு வாக்குமூலம்

-நந்தினி சேவியர்-

எனது கட்டுரைத் தொடர் எனது சுயசரிதையோ என எண்ணத்தூண்டும் வகையில் அமையக்கூடாது என நான் நினைக்கிறேன். எனது தொடருக்கு நிறைய விடயங்களைச் சேர்த்து இளைய தலைமுறையுடன் அனுபவங்களை பகிர ஆசைப்படுகிறேன். ஒரு நேர்கோட்டில் அல்லது தட்டையான விதத்தில் எனது எழுத்துக்கள் அமைந்து விடக்கூடாது என்பதில் நான் மிக அவதானமாக இருக்கிறேன்.

எல்லா (நல்ல) எழுத்தாளர்களைப் போலவே எனது இளமைக்கால அனுபவங்கள் மிக மிக துன்பம் தோய்ந்த வகையாகவே அமைந்துவிட்டன.

பிடிவாதம், புறக்கணிப்பு, ஓர்மம் என என் வாழ்வு கழிந்து போனது... கழிந்து போகிறது. இவற்றை நான் எப்படி எதிர் கொண்டேன் என்பதை உங்களுக்குச் சுவாரஸ்யமாக சொல்ல ஆசைப்படுகிறேன்.

எனது வாயால் எனது எழுத்தால் உங்களுடன் பேசுவதோடு இடையிடை பிறர் மூலமும் என்னைப் பற்றி பேசவைக்கலாம் எனவும் எண்ணுகிறேன்.

எனது நெருங்கிய உறவினர்கள் பலர் புலம் பெயர்ந்து விட்டனர். நானும் என்பதுகளில் கடவுச்சீட்டு ஒன்றைப் பெற்றிருந்தேன். அது பாவிக்கப்படாமலே காலாவதியாகிவிட்டது ஒரு நண்பர் கூறியது போல் பாஸ்போட் எடுத்த காலத்தில் நடந்து போயிருந்தாலும் உலகத்தைச் சுற்றி வந்திருப்பேன்.

இளவயதிலஅரசியல் அருட்டுணர்வு ஏற்பட்ட காலத்தில் இலக்கியத்தின் மூலம் அரசியலிலும், அரசியல் மூலம் இலக்கியத்திலும் வெறித்தனமான விருப்புக் கொண்டிருந்தேன். இளம் தலைமுறையின் மீது அவர்கள் நல்ல விடயங்களைப் பெற்றுக் கொள்ள என்னாலான சிறு பங்களிப்புக்களைச் செய்து வந்தேன். எனக்கு முந்தைய தலைமுறை எழுத்தாளர்கள் இளம் தலைமுறையின் மீது காட்டிய அலட்சிய மனோபாவங்கள் என்னையும் பாதித்தமையால் நான் சுயவிமர்சன ரீதியில் என்னை மாற்றிக் கொண்டேன். அதனால் நான் உறவினர்கள், பெருந்தகையாளர்களால் எள்ளலாகப் பார்க்கப்பட்டேன். இதற்கு என்னால் கூறப்படும் காரணங்களை விட சமீபத்தில் எனது முகநூலுக்கு வந்துள்ள ஒரு மருமகனின் வாக்குமூலத்தையும் எனது பதிவையும் இவ்வாரம் உங்கள் பார்வையில் பதிப்பிக்கிறேன்.

இதனை ஒரு சுய தம்பட்டமென நீங்கள் கருதமாட்டீர்கள் எனவும் நினைக்கிறேன் வாக்கு மூலத்தை வாசியுங்கள்.

நந்தினி சேவியர் என்கிற எங்கள் தங்க(ர்) மாமா!

முகப்புத்தகத்தின் மூலம் பல தொலைந்த நண்பர்களை மட்டுமல்ல தொலைந்த சொந்தங்களையும் தேடிப்பிடிக்கலாம் என்ற அனுபவம் எனக்கு ஏற்பட்டது. அதற்கு அண்ணன் ரஞ்சகுமாருக்குத்தான் முதலில் நன்றி சொல்ல வேண்டும்.

சமீபத்தில் ரஞ்சகுமார் அண்ணனின் பதிவொன்றை மேய்ந்து கொண்டிருந்த போது மனதில் ஒரு பளிச். அவரின் நண்பர்களின் புகைப்படங்களில் ஒன்று எனக்கு பரிச்சயமானதாகவும் ஆனால் கொஞ்சம் முதிர்ச்சியுடனும் தெரிந்து உடனே அவரின் time line ற்குள் நுழைந்து பார்த்தபோது ஆஹா.. இன்ப அதிர்ச்சி அது நந்தினி சேவியர் என்னும் எங்களின் தங்கர் மாமாவேதான். இவர் எனது சிறு வயது ஹீரோக்களில் ஒருவர். உடனே மனம் பின்னோக்கிப் பாய்கிறது.



எனது சிறு பராயக்காலம் இலங்கையில் யுத்தத்துக்கு முந்தியது. இளைஞர்கள் மகிழ்ச்சியுடன் இருந்த காலமது. பெல்பொட்டம், அகலமான பெல்ற், ஹிப்பி தலைமயிர், நெஞ்சின் மேலுள்ள ஒரு பொத்தானை திறந்து 'தம்' காட்டுவது, இரண்டு பக்கமும் கீழிறங்கிய மீசை, வாயில் பிறிஸ்ரல் அல்லது 3 ரோசஸ் சிகறற், இடையிடை பொப்பிசையை விசிலடிப்பது, பின்னிரவில் செக்கண்ட் ஷோ படம் பார்த்து விட்டு நாய்கள் துரத்த சைக்கிலில் ஜாலியாக யாழ் வீதியெல்லாம் வலம் வந்த எனது மற்றைய மாமாக்கள், சித்தப்பாக்கள், மச்சான்மார் மத்தியில் தங்கர் மாமா மட்டும் விதிவிலக்கு. பார்ப்பதற்கு பாவி போல் இருப்பார். அந்தக் காலத்தின் இளவட்டங்களை எந்த அம்சமும் பாதிக்காத ஒருவராக இருந்தார். இப்ப அவரை நினைக்கும் போது கூட அவரின் அந்தப் பளுப்பு நிற ஷேர்ட்டும், சாம்பல் நிற லோங்ஸ்சும், கறுப்பு பாட்டா செருப்பும் தான் கண்முன் முதலில் வருகிறது.

விடுமுறைக்கும், விஷேஷங்களின் போதும் எனது தந்தையின் வீட்டுக்கு செல்வதென்றால் எனக்கு ஒரே புளுகம். நல்லூரில் இருந்த அந்த வீட்டில் என்னயொத்த வயதினர்களான எனது பெரியப்பா பிள்ளைகள் ஜெனா வின்சன், மச்சான் வசந்தன் பக்கத்துவீட்டு உறவினர்களான ஹென்றி, தவம் மற்றும் ஜெனாவின் நண்பர்கள் எல்லோரும் ஒன்று கூடுவோம். முற்றத்தில் நாங்கள் சிரிப்பும் கும்மாளமும் இருக்கும் போது அடுப்படியில் இருந்து (இப்போது குசினி என்கிறார்கள்) எங்கள் ஆச்சியின் பேர்போன வறுத்த அரிசிமாப்புட்டும், மாசிச்சம்பலும், முரல் அல்லது கருவாட்டுச் சொதியின் வாசனையும் கிளப்பி வீட்டை நிறைக்கும். முற்றத்தில் சிறுவர்களான எங்களின் நடுவே சிறுவர்களோடு சிறுவனாக தங்கர்மாமா வீற்றிருந்து எம்மிடம் வித்தியாசமான ஆனால் ரசிக்கத்தக்க வகையில் எம்முடன் கதைத்தும் கேள்வி கேட்டுக் கொண்டும் இருப்பார். சிறுவர்களான எமக்கேற்ற வகையில் ஞாயிற்றுக் கிழமைகளில் நடக்கும் கிறீஸ்தவர்களின் பூசைகளையும், சுவாமிமார்களையும் பற்றியதாயும், கோயிலில் சுவாமிக்கு என் குறிப்பிட்டவர்கள் மட்டும் உதவுகிறார்கள் போன்றவையும், என்ன மாதிரியான புத்தகங்களை வாசிக்க வேண்டும் என்பதும், அதற்கான விளக்கங்களும் இருக்கும். இவற்றை சிறுவர்களான நாம் ரசிக்கும்படியாக எம்முடன் கதைப்பதுதான் அவரின் தனித்தன்மை.

தொடரும்

# நொக்ஸ் மரம்

(கா.செந்தூரன்)

19 நவம்பர் 1659 அன்று கிழக்கிந்திய வர்த்தக கம்பனிக்கு சொந்தமான ஆன்' (ANN) என்ற கப்பல் இலங்கையை அண்மித்த பகுதியில் பயணித்து கொண்டு இருந்தது அக்கப்பலில் கப்டன் மூத்த றொபேட் நொக்ஸ்,அவருடைய மகன் இளைய நொக்ஸ் மற்றும் அவரது தோழி, கப்பல் மாலுமிகளுடன் அக்கப்பல் பயணித்து கொண்டு இருந்து.



திடீர் என எங்கிருந்தோ வந்த புயல் கப்பலை தாக்க வேறு வழி இன்றி நொக்ஸ் குழுவினர் கொட்டியார குடா நோக்கி தங்களது கப்பலை செலுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. கப்பல் கொட்டியார குடாவின் ஊடாக பயணிக்கிறது.

கப்பல் பலத்த சேதத்துக்கு உள்ளனதால் மனித உதவிகள் நொக்ஸ் குழுவினருக்கு தேவைப்பட்டது. உணவுக்காகவும் கப்பலை திருத்துவதற்கு உதவி பெறுவதற்கும் நொக்ஸ் குழுவினர் மூதுார் கடற்கரையை அடைகின்றனர்.

சில வேளை தங்கள் எதிரிகள் என நினைத்து தாக்கப்படலாம் என




எண்ணிய நொக்ஸ் குழுவினர் தங்களை பாதுகாத்து கொள்வதற்காக விருந்தினராக நிலப்பகுதிக்கு நுழைய எண்ணுகின்றனர்.அப்பகுதி மக்களும் இவர்களை விருந்தினராகவே அழைக்கின்றனர்.

இக்காலப்பகுதி கொட்டியாயபுர பற்று சிற்றரசு(வன்னிமை) கண்டி அரசன் இரண்டாம் ராஜசிங்கனின் (1629-1687)அதிகாரத்தின் கிழ் இருந்தது



இச்செய்தி கண்டிய மன்னன் ராஜசிங்கனுக்கு செல்கிறது. அன்றைய நாட்களில் மன்னனுக்கு மேற்கு நாட்டவர்களுடன் இருந்த வியாபார பகை காரணமாக நொக்ஸ் குழுவினரை கைது செய்ய மன்னன் முடிவு செய்கிறான்.இவ்வாறு கைது செய்யப்பட போகின்ற செய்தியை அறிந்த நொக்ஸ் குழுவினர் மூதூர் பகுதியில் உள்ள ஒரு புளியமர போந்தில் ஒழித்து கொள்கின்றனர். அனால் கண்டிய மன்னன் அதிகாரிகள் அவர்களை அப்புளியமரத்தில் ஒளிந்திருக்கும் வேளையில் கைது செய்கிறனர்.அப்படி கைது செய்யப்பட்ட நொக்ஸ் குழுவினர் கண்டிக்கு கொண்டு செல்லபடுகின்றனர்.அதன் அதன் பிறகு இலங்கையை கைப்பற்றிய கிழக்கிந்திய வர்த்தக கம்பனி நொக்ஸ் குழுவினர் கைது செய்யப்பட்டதன் நினைவாக 1893 அங்கு ஒரு நினைவு கல்லை நிறுவியது. அந்த நினைவுக்கல் பிருத்தானிய அரசாலும் அதன் பின் வந்த இலங்கை அரசாலும் பாதுகாக்கப் பட்டு வந்தது. 1964ம் ஆண்டு ஏற்றபட்ட புயலால் நொக்ஸ் மரம் முறிந்து விழுந்து விட்டது .தற்போது அவ் விடத்தில் இன்னும்மொரு புளியமரம் நினைவாக இருக்கிறது. அங்கு இருந்த நினைவுக்கல் இப்போது கொழும்பு அரும்பொருள் காட்சியகத்தில் உள்ளது. அது மட்டும் அல்லாது அவ்வீதி இன்று வரையும் நொக்ஸ் வீதி என்று அழைக்க



படுகிறது. பிருத்தானிய பதிவுகளில் இது கொட்டியார் பகுதியில் உள்ள வெள்ளை மனிதன் மரம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை மக்களின் ஆட்சி முறை, மற்றும் பண்பாட்டை An Historical Relation Of The Island Ceylon In The East Indies என்ற புத்தகம் மூலம் இளைய நொக்ஸ் வெளிக்கொண்டு வருவதற்கு இந்த புளியமரமும் ஒரு காரணமாக இருந்து இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரங்கு

## தொடர்பாடலில் அரங்கு

ஏற்கனவே தொடர்பாடல் சம்பந்தமாக மிக எளிமையான அடிப்படையான சில விடயங்களை சென்ற கட்டுரையில் தெரிந்து கொண்டோம். அது மனிதருக்கிடையேயான தகவல் பரிமாற்றத்திற்குரிய இயல்பு நிலையைக் கொண்டமைந்த தொடர்பாடல் ஆகும். அதன் ஒரு தொடர்ச்சியாக தொடர்பாடலில் அரங்கு கொண்டுள்ள பங்கினையும் அது சமூகத்துடன் தொடர்புபட்டுக்கொள்ளும் தன்மை பற்றியும் சமூகம் சார்ந்த நிலையிலிருந்து சிந்திக்க முடியும்.

தொடர்பாடல் கொள்கையின் அடிப்படை எப்போதும் ஒன்று தான். ஆனால் அதனை ஊடுகடத்தும் கருவி தான் காலத்திற்கும், தேவைக்கும் ஏற்ப மாறுபட்டு செல்கிறது. அரங்கு என்பது மனிதன் மகிழ்வைக் கொண்டாட உருவாக்கிக் கொண்ட களம். இன்று கலை, அழகு, உணர்ச்சி, பிரச்சாரம், போராட்டம், புரட்சி, முனைப்பு பெற்ற நடவடிக்கைகள் என அரங்கின் வெளி அகன்று செல்கிறது. வெகுசன தொடர்பாடலில் இதன் வகிபாகம் கணிசமானது என்பது ஒரு மறை பொருளாகவே உள்ளது. அரங்கு பலமிக்க சாதனம் என உணர்ந்து பயன்படுத்தி வெற்றி பெற்றவர்களும் உள்ளனர். சாதாரணமாக பயன்படுத்த முயன்று வெற்றி கொண்ட பின் அது பற்றிய தேடலில் குதித்தவர்களும் உள்ளனர். விளையாட்டு பொருளாக எண்ணி மூக்குடைபட்டவர்களும் உள்ளனர். ஆகவே இங்கு தான் அரங்கை தொடர்பாடலுக்கு பயன்படுத்தும் போது தெளிவாகவும் நேர்த்தியாகவும் இயங்க வேண்டிய தேவை புலப்படுகின்றது.

அரங்கு என்பது ஒரு குழுத் தொடர்பாடல். இங்கு மக்கள் தான் செய்தியை பெறும் பயனாளிகளாக காணப்படுவர். ஆனால் இங்குள்ள விசேட தன்மை யாதெனில், நாம் தகவல் ஒன்றினை பெறப்போகின்றோம் என்ற யோசனையில் மக்கள் வருவதில்லை, அவர்கள் ரசிப்பதற்கும் பொழுதை கழிப்பதற்காகவும் தான் ஒன்று கூடுகின்றனர். அச்சந்தர்ப்பத்தில் அரங்கை ஊடகமாக்கிக் கொண்டு தகவலை வழங்கும் பொறுப்பு உரியவர்களை சாரும். மகிழ்ச்சி- நேரம்- இரசனை- உணர்ச்சி- இவை எல்லாவற்றையும் வடிகட்டி பிரித்தெடுக்கும் போது அங்கே செய்தி என்ற அம்சம் தெரியும். ஆனால் அரங்கில் பார்ப்போராக கலந்து கொள்ளும் எல்லோரும் பிரித்தறியும் திறன் கொண்டவர்களாக இருப்பர் என்று கூறமுடியாது. இன்னும் சொல்லப் போனால் அவர்கள் அதனை விரும்பவும் மாட்டார்கள். ஆனால் அழகியலோடு இணைத்து தகவலும் அவர்கள் மூளையில் உறைக்கும் படியாக செய்ய வேண்டும். இது ஒரு வகையில் சக்கரை பூசிய மருந்து போன்றது தான். முக்கியமான பேசு பொருளை சுற்றி ஆடல், பாடல், கதை, கவிதை, அசைவு, இசைவு என பல சோடனைகளை செய்து தான் மக்களிடம் கையளிக்க வேண்டும். இவ்விடத்தில் தான் மக்கள் விரும்புபவற்றிற்கும் நாம் சொல்ல நினைப்பதற்கும் சமநிலையை பேணும் கெட்டித்தனம் கண்டு கொள்ளப் படுகின்றது. இது கொண்டாட்டமான ஒரு தொடர்பாடல் ஆகும்.

பத்திரிகை ஊடகங்களோ, தொலைக்காட்சி ஊடகங்களோ, அரங்கு போன்று மக்களுடன் நெருக்கமாக ஊடாட முடியாது. ஏனைய ஊடகங்களில் ஒரு அந்நியப்பாடு நிலவுகின்றது. ஆனால் அரங்கு இதற்கு நேர்மாறானது. மக்களை சமூகத்தை உள்வாங்கி அவர்களின் வாழ்வியலுக்கு ஊடாக தோற்றம் பெற்றமையினால் நிராகரிக்க முடியாத கலைவடிவமாக இருப்பதே அதற்கு காரணம். பொது நோக்கின் அடிப்படையிலேயே அரங்கு தனது தொடர்பினை சமூகத்துடன் கொண்டுள்ளமையினால் தொடர்பாடலின் புதியதொரு வகையினை நோக்கி ஒரு கருத்தியலை உண்டு பண்ணுகிறது. இது பற்றிய ஆராய்ச்சிகள் காலப்போக்கில் சாத்தியப்படலாம். பண்பாட்டு வடிவத்தை தொடர்புகொள்சாதனமாக உருவாக்கிக் கொள்வதும், தொடர்பு கொள்வதற்காக பண்பாட்டு வடிவத்தை தெரிவு செய்து கொள்வதும் பற்றியதான ஆழ்ந்த கருத்துப்பகிர்வுகள் இன்னும் வெளிவராமல் இருப்பதை காணலாம். ஆனால் இது பற்றிய பேச்சு பல மட்டங்களிலும் பேசப்படுகின்றது. ஊடகமும் அரங்கும் என்ற இணைதுறை பற்றிய சிந்தனை தொடங்கி பழையதாகிவிட்டது. ஆனாலும் அது பற்றிய பரவலாக்கம் இன்னமும் தேவையாகவுள்ளது. ஒரு எளிமையான எல்லோராலும் புரியக்கூடிய, வாழ்வியலோடு நெருக்கமான மகிழ்ச்சியோடு உணர்வையும் செய்தியையும் பரப்புரை செய்யக்கூடிய ஒரு கலையை வளர்க்க வேண்டிய தேவைப்பாடும் உள்ளதை அது சார்ந்தவர்கள் உணரவேண்டும்.

அரங்கினூடாக நடைபெறும் தொடர்பாடலானது சுழற்சி முறையிலான அமைப்பில் செயற்படும். சூழலில் உள்ள பிரச்சினையை இனங்கண்டு கொள்வதும், மக்களுக்குள்ளிருந்து அதனை எடுத்துக்கொள்வதும், மீண்டும் அரங்கவடிவமாக நின்று மக்களுக்கு கொடுப்பதும் தொடர்புபடுத்துவதும் என ஒரு கொடுக்கல், வாங்கல் நிகழ்வு இடம் பெற்றுக்கொண்டிருக்கிறது. இது இன்று நேற்றல்ல. கிரேக்க மரபு காலத்திலிருந்து நடைபெறுகின்றது. மக்களை ஒன்றினைப்பதிலும் செயற்படுத்துவதிலும் அரங்குக்கு சாதகத்தன்மை அதிகம் என்பதை புராதன சடங்குமுறை அரங்கினைக்கொண்டு சுட்டிக்காட்ட முடியும். ஆனால் அன்றைய காலத்தில் அதனை தொடர்பு கொள்வதற்கான வடிவம் என்ற நிலையில் யாரும் சிந்தித்திருக்கவில்லை.

இன்று தொடர்பாடலில் அரங்கின் மீதான நம்பிக்கை அதிகரித்துள்ளது என்பதற்கு பல உதாரணங்களை கூறலாம். மேற்கத்தைய நாடுகள் முதல் ஆசியநாடுகள் வரை அரங்கை மூலப்பொருளாக வைத்து பல நிகழ்வுத்திட்டங்களை வழிவகுக்கின்றது. மேலும் இது அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் செயல்திட்டத்திலும் (NGO Project) இணைக்கப்பட்டுள்ளது. அரங்கை நம்பி அதிக முதலீடுகள் செய்யப்படுகின்றது. தொடர்பாடல் சாதனமாக அரங்கு இனங்காணப்பட்டு வருகின்றது என்பதற்கு இது போன்ற பல விடயங்களை சுட்டிக்காட்ட முடியும். இரண்டும் ஒன்றை ஒன்று உள்வாங்கிக் கொண்ட சம்பவம் தெரியாமலே நடந்தேறியது எனலாம். இப்போது அதனை தெரிந்து கொள்ளும் வகையில் சிந்தனை முனைப்பு பெற்றுள்ளது. ஏற்கனவே கூறியது போன்று மரபுக்காலத்திலிருந்து இதற்கு ஒரு வரலாறு உண்டு. அரங்கு தொடர்பாடலுக்கு உகந்த வடிவம் என்று தெரியாத போது அரங்கை எப்படி பயன்படுத்தினர். அது பற்றி, பல சிந்தனையாளர் மத்தியில் கருத்துக்கள் உருவான பின்பு எப்படி அதனை பயன்படுத்தினர் என பல கிளைகளை பரப்பி ஆய்வு செய்ய வேண்டிய விடயம் இது. இது பற்றி தேடுவதற்கும் பகிர்ந்து கொள்ளுவதற்கும் இன்னமும் இடம் இருக்கிறது. இன்னுமோரு சந்தர்ப்பத்தில் இதன் தொடர்ச்சியாக புதிய தகவல்களை பகிர்ந்து கொள்வோம்.

**அரங்காலயா பிரதீப்**

## நெஹ்ரு தீவுகளில் கலவரம்

ஆஸியின் புகலிடக் கோரிக்கையாளர்கள் தங்கவைக்கப்பட்டுள்ள நெஹ்ருவின் புகலிட முகாமில் ஏற்பட்ட கலவரங்களால் சுமார் 6 புகலிடக் கோரிக்கையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். சொத்துக்களிற்கும் சேதம் ஏற்பட்டுள்ளது. நெஹ்ருவிற்குப் பயணப்பட விரும்பாத புகலிடக் கோரிக்கையாளர்களை வலுக்கட்டாயமாக அங்கு அனுப்பிவைத்ததால் தான் கலகம் நிகழ்ந்திருக்கலாம் என ஆஸியின் குடிவரவு அமைச்சர் கிறிஸ் போவுன் தெரிவித்தார். கலகத்தில் ஈடுபட்ட சிலர் கைதாகித் தடுப்பிலுள்ளனர்.

சுமார் 15ற்கும் மேற்பட்ட ஈரான், ஈராக்கிய குழுவினரிடையேயே கலகம் நிகழ்ந்துள்ளது. எனினும் இக்கலகத்தினால் இலங்கையருக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பாகத் தகவல்கள் எவையும் கசியவில்லை.

கிறிஸ் போவுன் மேலும் தெரிவிக்கையில் இவ்வகைக் கலகங்களால் புகலிடக் கோரிக்கையாளர்களை நெஹ்ரு தீவுகளிற்கு அனுப்பும் தமது முடிவுகளில் எவ்வித மாற்றமும் நிகழாது எனத் தெளிவு படுத்தினார். அத்துடன் கலகத்தில் ஈடுபடுபவர்களின் புகலிடக் கோரிக்கை விண்ணப்பங்களும் பொதுவான நெறிமுறையின் ஊடாகவே பரிசீலிக்கப்படும் எனவும் விளம்பினார்.

இவ்வாறிருக்க இவ்வாரத்தில் மேலும் 143 சட்டவிரோத குடியேற்ற வாசிகளுடன் படகொன்று கிறிஸ்மஸ் தீவைச் சென்றடைந்துள்ளது குறிப்பிடத் தக்கது.

## முரசின் உலக வலம்

### தீவுகளுக்கான உரிமைப் போரில் சீனாவும் யப்பானும் தீவிரம்.



சென்காகு தீவுகளுக்கான உரிமைப் போரில் சீனாவும் யப்பானும் தீவிரமாக இறங்கியுள்ளன. தாய்வான் தனக்குரித்தான தீவுகளே அவை என கடந்தவாரத்தில் உரிமை கோரியிருந்த போதும் சீன மற்றும் யப்பானிய போட்டிக்கிடையே சிக்காமல் நழுவிச் செல்லும் போக்கிலேயே தற்போது தாய்வான் இருப்பதை அதன் நடவடிக்கைகள் கோடிகாட்டியுள்ளன. பல ஆண்டுகளாக யப்பானிய மீன்பிடிப்போராலும் தாய்வானிய மீன்பிடிப்போராலும் அரசியல் முரண்பாடுகள் ஏதுமின்றி மீன்பிடி நடத்தப்பட்ட இத் தீவுகளின் உரிமையை சீனா கோரத்தொடங்கிய பின்னரே அவ்வலயத்தில் மிகவும் பதற்றம் நிலவுவதாக யப்பானிய மீன்பிடிகாரரொருவர் தெரிவித்துள்ளார். யப்பானியர்களே காலம் காலமாக அத்தீவுகளில் வாழ்ந்ததாகத் தெரிவித்த அவர் அவ்வாறு வாழ்ந்தவர்களின் உடலங்கள் அத் தீவுகளிலேயே புதைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

யப்பான் தற்போது சுமார் 30 கடலோரக் காவற் படைப் படகுகளை சென்காகு தீவுகளின் பாதுகாப்பிற்காக அத் தீவுகளுக்கு நெருக்கமாகவுள்ள இஸ்ஸிகாகி துறைமுகத்தில் நிறுத்தியுள்ளது. இத் துறைமுகம் சென்காகு தீவுகளிலிருந்து சுமார் 170 கிலோமீற்றர் தொலைவிலுள்ளது. உண்மையில் தாய்வானே சென்காகு தீவுகளுக்கு அருகிலுள்ள நாடாகும். தாய்வானின் பென்ஜியாஸலெட் துறைமுகம் சென்காகுவிலிருந்து 140 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது.

இது இவ்வாறிருக்க சென்காகு தீவுகளிலிருந்து 330 கிலோமீற்றர் தொலைவிலுள்ள சீனா அத் தீவுகளுக்காக தான் விட்டுக்கொடுக்கப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளதுடன் சென்காகுவின் ஐந்து தீவுகளையும் தம்மிடமிருந்து யப்பான் திருடியுள்ளதாகவும் அறிவித்துள்ளது. மேலும் சீனாவின் மிகப் பிரபல்யம் வாய்ந்த ஒரு புத்தக வெளியீட்டாளர்கள் புதிய சீனாவின் வரைபடத்தை வெளியிட்டுள்ளனர். அவ் வெளியீட்டில் சென்காகு தீவுகளையும் சீன ராச்சியம் உள்ளடக்கியுள்ளமை யப்பானுக்குப் பெரும் அதிர்ச்சியைத் தந்துள்ளது. அதேவேளை சீனாவின் 8 ஆராய்வுநோக்குக் கப்பல்கள் (Surveillance Ships) இப்பிரதேசத்தின் பல முனைகளை ஆராய்ந்து சென்றுள்ளன.

### தேசிய சேமிப்பு வங்கியின் இலவச மருத்துவ முகாம்

இலவச மருத்துவ முகாமொன்றை இலங்கைத் தேசிய சேமிப்பு வங்கியின் திருக்கோணமலைக் கிளை நடாத்தி முடித்துள்ளது. தேசிய சேமிப்பு வங்கியின் திருமலைக் கிளையில் நிகழ்ந்த இந்த மருத்துவ முகாமில் சுமார் 120 பேர் பங்குபற்றிப் பயனடைந்துள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். 29.09.2012 சனிக்கிழமை நடந்த இம்முகாமில் மருத்துவ சிகிச்சையை சுமார் 45 பயனாளிகளும் கண் பார்வைச் சிகிற்சையை 75 பயனாளிகளும் பெற்றுக் கொண்டுள்ளனர். இக்கண் மருத்துவ சிகிச்சையைப் பெற்றுக் கொண்ட 75 பயனாளிகளில் 57பேருக்கு கண்ணாடி வழங்கவும் முன்மொழியப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறதிக்கெதிரான நினைவுகள், மறந்து போனவையும் பா.சுஜந்தனின் "நிலம்பிரிந்தவனின் கவிதை"க்கு சாகித்திய மண்டலப்பரிசும்




இலங்கை அரசின் விருதுகள் பற்றிய அக்கறைகளை என் தலைமுறை புறமொதுக்கி நீண்ட நாட்களாகிய பின்னர் இந்த விருது குறித்து எழுதுவதற்கு எதோ அவசியம் இருப்பதாக கருதி இதை எழுதுகிறேன். இந்த அவசியத்தை ஏற்படுத்தியதில் "மறதிக் கெதிரான நினைவின் போராட்டத்தின்" உள்ளடக்கம் ஏற்படுத்தி இருக்கிறது. இம் "மறதிக் கெதிரான நினைவின் போராட்டத்தின்" அமர்வு 1இன் முதலாவது தலைப்பு" த.அகிலன், தீபச்செல்வன், யோ.கர்ணன் எழுத்துக்களினூடாக போரும் அதன் தடங்களும்" என்றிருக்கிறது.

இதனூடாக மறதிக் கெதிரான நினைவுகள் முள்ளிவாய்க்காலின் நினைவுகளை, அதனுள் வாழ்ந்த படைப்பாளிகளின் படைப்புகளுக்கூடாக மீட்டுருவாக்கம் செய்வது நோக்கமாக இருக்கலாம். ஆனால் இதில் ஒரு முக்கிய விடயம் கவனிக்காமல் விடப்பட்டுள்ளது. அல்லது மறதிக் கெதிரான நினைவுகளை செய்வோர் மறந்துள்ளனர் என்றே நான் நினைக்கின்றேன். முள்ளிவாய்க்கால் பேரவலம் எல்லாவகையிலும் மிகப்பெரிய அவலமே. ஆனால் இந்த அவலத்தின் தொடக்கம் வன்னியில் இல்லை.

அது கிழக்கு மூதூரிலும் வாகரையிலும் இருந்து தொடங்குகிறது என்பதை மறதிக்கெதிரான நினைவின் போரட்டம் மறந்து விட்டது என்பது வேதனையான விடயம். இது பொதுப் போக்காகவே ஆகவிட்டது இன்னும் கவலையளிகின்ற விடயம். முள்ளிவாய்க்கால் பேரலவத்திற்கு மூன்றாண்டுகளுக்கு முன்னரே கிழக்கு மூதூரிலும் , வாகரையிலும் அவலத்தின் கூக்குரல் எழுந்தபோது அதுபற்றி எம் அக்கறைகள் தொடர இருக்கும் பேரவலம் பற்றிய அபாய எச்சரிக்கைகளாக இருக்கவில்லை. அதை நாம் அவலமாக நினவைில் கொள்ளவில்லை. அங்கே மக்கள் பூச்சரங்களாலும் மயிலிறகாலும் வருடி வரவேற்றகப்படவில்லை. முள்ளிவாய்க்காலில் எப்படி மக்கள் நிர்கதியாக விடப்பட்டார்களோ அப்படித்தான் அங்கேயும் விடப்பட்டார்கள். முள்ளிவாய்யகாலுக்கு முன் தொடங்கிய அந்த மக்களின் துயரமும் இன்னும் முடிந்து விடவும் இல்லை. ஆனால் நாம் மறந்து போனதை நினைவுகூரும் போதும் அவற்றை மறந்து விட்டோம் என்பதை எந்தவகையில் சேர்ப்பது.

இன்று அவலத்தின் அத்தனை பரிமாணங்களையம் பதிவு செய்கின்ற படைப்பாளிகளின் கவனத்தில் அன்று அந்த மக்களின் துயரமோ நிர்கதியான நிலையோ ஊடுருவி முனைப்பு பெறவில்லை. இது அவலத்தின் அரசியலில் கண்டுகொள்ளப்படவே இல்லை. முன்பு போரட்டத்தின் போது சுற்றிய அதே வட்டத்தில் தான் அவலம் பற்றிய நினைவுக் குரல்களும் பயனிக்கின்றமை வேதனையளிக்கிறது.

இந்நிலையில்தான் கிழக்கின் பாடல்கள் ஒப்பாரிகளாக இல்லாமல் 2006 அவலத்தின் வெளிப்பாடாக ஒலிக்கத் தொடங்கின. மனிதம் என்பதை ஆழமாக முன்னிறுத்தி தம்மீதான மனித நேய ஆதரவுகளைக் கோரி ஈழத்தமிழச் சூழலின் படைப்பு வெளிகளில் உலாவத் தொடங்கின. ஒப்பாரிகளாக இல்லாமல் மனிதத்தை முன்னிறுத்திய குரல்கள் கிழக்கிலிருந்தே ஒலிக்கத் தொடங்கியிருந்தன. பா.சுஜந்தன், சம்பூர் வதனரூபன் போன்றவர்கள் அதை அழுத்தமாக தமது படைப்புகளில் பதிவு செய்தவர்கள். அதிலொன்றுதான் "நிலம்பிரிந்தவனின் கவிதைகள்".

எல்லாம் சிதைவுற்ற நிலையில் வாழும் மக்களின் குரல்களாக அவை ஒலித்துக் கொண்டிருந்தபோதும் இன்றுவரை அந்தக் குரல்கள் பெரிதாக கண்டுகொள்ளப்படவில்லை. அந்தமக்களின் துயரம் இன்னும் முடிந்தபோனதாக இல்லாத போதும் படைப்பாளிகள் இந்தக் குரல்களை கருத்தில் எடுக்கவில்லை. அந்தவகையில்த்தான் இந்த விருது அந்த மக்கள் அவலத்திலிருந்து விடுபடுவதற்காக மனிதத்தை கைக்கொண்டு எழுப்பும் குரல் முன்னிறுத்த முக்கியமானதாக கருதுகிறேன். இந்த விருது அதை சாத்தியப் படுத்தப் போவதில்லை என்பதை அறிந்தே இருந்தாலும் கிடைக்கின்ற எந்த வாய்ப்பையும் தவறமுடியாத நிலையிலே அந்தக்குரல்கள் இருக்கின்றன.





இலங்கை அரச சார்ந்த விருதுகளுக்குத் தேர்நதெடுக்கப் படுகின்ற நூல்களின் மீதான தேர்வாளர்களின் மனோநிலை ஒருவித எதிர் மனோநிலையே கொண்டமைந்திருந்தன என்ற கருத்து தமிழ் மக்களிடையே தோற்றிவிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் இந்த விருதுகளிற்கான நூல்கள் ஒன்றில் அரச சார்பானதாகவே அல்லது தமிழர் பிரச்சினையை பேசாதவையாகவோ அமைந்திருப்பதாகத்தான் பொதுவாக கருதப்பட்டது. அதில் உண்மையும் இருந்ததுதான்.

ஆனால் "நிலம்பிரிந்தவன் கவிதைகள்" அரசினால் அவலத்திற்கு உட்பட்டவர்களின் குரலாக இன்றுவரை மனித நேயவாதிகளாலும் அரசியல் செயற்பாட்டாளர்களாலும், முக்கிய விடயமாக இலங்கை அரசின் மீது நெருக்கடி கொடுக்கும் மூதூர்கிழக்கு மக்களின் குரல்களாக மட்டும் தான் இருக்கின்றன என்பதையும் இங்கு குறிப்பிடவேண்டும். அந்தவகையிலும் இந்த விருது முக்கியமானதுதான்.

மற்றொரு விடயம் ஐக்கிய இலங்கைக்குள் தமிழர்களுக்கு தீர்வை தேடுவதாக தமிழ்த்தேசியத்தின் போக்கு முன்னிலை பெற்றுள்ள வேளையில் இலங்கை அரசினால் தமிழ் படைப்பாளிகளுக்கும் தமிழ் நூல்களுக்கும் வழங்கப்படும் விருதை இந்த தமிழ்த்தேசியவாத அல்லது தமிழ்தேசியவாத சார்பு இலக்கியவாதிகள் எவ்வாறு அணுகப்போகிறார்கள் என்பதுவும் முக்கியமானதுதான்.

# இலங்கையின் சாகித்திய விருதையும் வென்றார் சேவியர்

## இளம் கவிஞனுக்கான விருதை சம்பூர் சுஜந்தன் வென்றார்



இலங்கையின் சாகித்திய மண்டலப் பரிசுகளானவை வருடாந்தம் கலைத்துறைக்குச் சேவையாற்றிய கலைஞர்களாக வழங்கப்பட்டுவரும் ஓர் விருதாகும். இவ்வகையில் 2011ம் ஆண்டில் வெளியான புத்தகங்களுக்கான சாகித்திய மண்டல விருதுகளை திருக்கோணமலையின் சிரேஸ்ட கலைஞர் ஒருவரும் இளங்கவிஞர் ஒருவரும் இவ்வாண்டில் வென்று சாதனை படைத்துள்ளனர். சிறுகதைக் கான சாகித்தியப் பரிசை தனது நெல்லிமரப் பள்ளிக் கூடங்கள் என்ற சிறுகதைத் தொகுப்பிற்காக திரு. நந்தினி சேவியர் அவர்களும் கவிதைக்கான சாகித்தியப் பரிசை நிலம் பிரிந்தவனின் கவிதை என்ற தனது கவிதை நூலிற்காக திரு. சுஜந்தனும் வென்றுள்ளனர்.

கடந்த சில நாட்களுக்கு முன்னரே கொடகேயின் சாகித்திய விருதை திரு. நந்தினி சேவியர் அவர்கள் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. அதைத் தொடர்ந்து அவரது எழுத்துக்களிற்கான இலங்கை நாட்டின் அங்கீகாரமாக இச் சாகித்திய விருதை அவர்கள் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சம்பூர் சுஜந்தன் தனது முதலாவது கவிதை நூலிற்கே சாகித்திய விருதை வென்றுள்ளார். அவரது கவிதைநூலான "நிலம் பிரிந்தவனின் கவிதை" இந்தியப் பதிப்பகமான காலச்சுவடின் வெளியீடாக கடந்த ஆண்டில் வெளியாகியிருந்தது. சுஜந்தனின் கவிதைகள் சம்பூரிலிருந்து இடம்பெயர்ந்து பல ஆண்டுகளாக சிறிய கொட்டில்களில் அல்லலுறும் மக்களின் அவலங்களை உலகிற்கு எடுத்தியம்பும் வகையில் வரையப்பட்டிருக்கினறன.

(ஸ்ரீ)

# திருமலை வளாகத்தில் விசேட கருத்தரங்கு

கிழக்கு பல்கலைக்கழக திருமலை வளாகத்தில் கல்வி கற்கும் 3 ஆம் வருட தொடர்பாடல் கற்கை நெறி மாணவர்களுக்கான விசேட கருத்தரங்கொன்று கடந்த மாதம் வளாகத்தில் இடம்பெற்றது.

செய்தி தொகுப்புக்களை செவ்வனே அமைப்பது எவ்வாறு? என்ற தலைப்பில் 4 நாட்கள் இக் கருத்தரங்கு இடம்பெற்றது. பிரபல அமெரிக்க விரிவுரையாளர் ரபேக்கா வெக்ஸ்லர் இந்த கருத்தரங்கினை நடாத்தினார்.

சுமார் 18 நாடுகளில் இவ்வாரான கருத்தரங்குகளை நடாத்தி இருக்கும் இவர் முதன் முறையாக இலங்கையில் இவ்வாரானதொரு கருத்தரங்கினை ஒழுங்கு செய்து இருப்பது திருமலை வளாகத்தில் என்பது விசேட அம்சமாகும்.

(பவாஸ்)



கிழக்கு பல்கலைக்கழக திருகோணமலை வளாக தொடர்பாடல் கற்கை நெறி துறைத்தலைவர் கலாநிதி எஸ்.ரகுராம் அவர்கள் இந்த பயிற்சி நெறியை ஒழுங்கு படுத்தி இருந்தமை குறிப்பிட்டத்தக்க அம்சமாகும். பயிற்சி நெறி முடிவில் திரு ரபேக்கா வெக்ஸ்லர் அவர்களுக்கு நினைவுப் பரிசினை கலாநிதி திரு ரகுராம் அவர்கள் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# திருமலையில் பெண் ஊடகவியலாளர்களுக்கு வானொலிப் பயிற்சி !

## மலைமுரசின் பெண் ஊடகவியலாளர்களுக்கும் வாய்ப்பளித்தது யூ.எஸ்.எயிட்

"இலங்கையில் ஊடகத்துறைக்குள் வந்து பணியாற்றுவதென்பது அவ்வளவு இலகுவான ஒரு விடயமல்ல என்பது உங்களில் பலருக்கும் தெரியும். பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள நிகழ்வுகளை வெளியில் எடுத்துச் சொல்ல பாதிக்கப்பட்ட பிரிவிலிருந்தே ஊடகவியலாளர்கள் உருவாக வேண்டும். கடந்த 10 வருடங்களுக்கு மேலாக ஊடகவியலாளர்கள் தாங்கள் விரும்பிய விடயத்தை வெளிக்கொண்டுவர முடியாதவர்களாக இருந்தர்ர்கள்."

இவ்வாறு யூ.எஸ்.எயிட் நிறுவனத்தின் திருகோணமலை மாவட்ட பிரதித் தலைமைப் பகுதி அதிகாரி திரு பிரட் மெஸ்ஸே கூறினார்.

கடந்த 28.09.2012 அன்று வெள்ளிக்கிழமை திருகோணமலை யூ.எஸ்.எயிட் நிறுவன அலுவகத்தில் வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களுக்கான ஊடகப் பயிற்சி நெறி ஆரம்பமானது.

திருகோணமலை யூ.எஸ்.எயிட் நிறுவன அலுவலகத்தில் இடம்பெற்ற இந்த மூன்று நாள் வானொலி நிகழ்ச்சித் தயாரிப்புப் பயிற்சி நெறிகளில் திருகோணமலை மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட தமிழ் முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த ஆர்வமுள்ள 12 [illegible]ர். அவர்களுள் மூன்று ஊடகவியலாளர்[illegible]சேர்ந்தவர்களாவர்.

நிகழ்வில் அங்கு தொடர்ந்து உரையாற்றிய யூ.எஸ்.எயிட் நிறுவன அதிகாரி திரு பிரட் மெஸ்ஸே "திறந்த கலந்துரையாடலின் கீழ் ஊடகவியலில் ஆர்வமுள்ளவர்களை குறிப்பாகப் பெண்களை உள்வாங்கி அவர்களுக்குப் பயிற்சிகளை வழங்கி வருகின்றோம். ஆரம்பத்தில் இப் பயிற்சி ஒரு சிறிய நிகழ்வாக இருந்தாலும் எல்லோருக்கும் நீண்ட கால நோக்கில் நன்மையளிக்கக் கூடியது. பெண்களாகிய நீங்கள் ஊடகத்துறையில் சிறந்த முறையில் ஆக்கபூர்வமாகப் பங்காற்றிப் பெருமை சேர்க்க வேண்டும். ஏற்கெனவேயும் எங்களது நிதியளிப்புடன் கொழும்பிலுள்ள ஊடகக்கற்கை நிலையங்களில் பயிற்சி பெற்று வெளியேறியவர்களும் இருக்கிறார்கள். கூடுதலாக வடக்கு கிழக்கு மாணவர்களுக்குத்தான் எமது ஆதரவும் உதவியளிப்பும் இருந்தது. எமது உதவி

(10ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கிறிஸ்டியானோ ரொனால்டோ மீண்டும் ஓர் ஹட்ரிக் கோல்களை அடித்துள்ளார்.



றியல் மட்ரிட் அணிக்காக விளையாடிவரும் கிறிஸ்டியானோ ரொனால்டோ அஜக்ஸ் அணிக்கெதிராக மூன்று கோல்களை அடித்து றியல் மட்ரிட் அணியை 4ற்கு 1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெறச் செய்துள்ளார்.

டச்சு அணியான அஜக்ஸ் அணியிற்கு எதிராக தொடர்ந்து 42வது, 79வது, 81வது நிமிடங்களில் ரொனால்டோ கோல்களை அடித்திருந்தார். இவ் வெற்றியுடன் றியல் மட்ரிட் அணி 6 புள்ளிகளுடன் "சம்பியன் லீக்" போட்டிகளின் டி பிரிவில் முதலிடத்திற்கு முன்னேறியுள்ளது. அடுத்த படிநிலையில் பொரூசிய டோர்த்மட் அணி 4 புள்ளிகளுடன் உள்ளது. மான்செஸ்டர் சிட்டி அணி தரப்படுத்தலில் 3வது நிலையிலுள்ளது. சில நாட்களுக்கு முன்னர் 3ற்கு 2 என்ற கோல்கள் கணக்கில் மான்செஸ்டர் சிட்டி அணியை றியல் மட்ரிட் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. இப் போட்டியில் முதல் அரைப்பாதியில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறாதிருந்த போதும் அடுத்த அரைப் பாதியில் போட்டியில் மொத்தமாக ஐந்த கோல்கள் போடப்பபட்டமை பெரும் விருந்தாக அமைந்திருந்தது.

## கறுப்பர்களின் அறைக்குள் நுழைந்த வெள்ளையினப் பெண்கள்

உலகக் கிண்ண ரி 20 போட்களின் அரையிறுதி ஆட்டத்திற்கு மேற்கிந்தியா, இலங்கை, அவுஸ்திரேலியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் தெரிவாகியிருப்பதை நாம் எல்லோரும் அறிவோம்.

கடந்த புதன் கிழமை இர்வு மேற்கிந்தியத் தீவுகள் அணியின் ஆட்டக்காரர்களை சந்திக்கும் ஆசை அவர்கள் தங்கியிருந்த அதே விடுதியின் மற்றோர் தளத்தில் தங்கியிருந்த மூன்று பிரித்தானியப் பெண்களுக்கு ஏற்பட்டது. அதனைப் பூர்த்தி செய்வதற்காக அவர் கள் மேற்கிந்திய அணியினர் தங்கியிருந்த தளத்திற்குள் அத்துமீறி நுழைய முயன்றுள்ளனர். அதற்காக அவர்கள் மேற்கிந்திய அணியினர் தங்கியிருந்த தளத்தினில் உடைவுகளை ஏற்படுத்த முயற்சித்த வேளையில் மேற்கிந்திய அணியினரின் பாதுகாப்பு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு கொள்ளுப்பிட்டிக் காவல் துறை அலுவலகத்தில் கையளிக்கப்பட்டு ள்ளனர். ஐந்து நட்சத்திர விடுதியொன்றி லேயே இவ் அசம்பாவிதத்தை அப் பெண்கள் அரங்கேற்றியுள்ளனர்.

கொள்ளுப்பிட்டிக் காவல்துறையினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## திருமலை வளாகக் கற்கைகள் வழமைக்குத் திரும்புகின்றன.

கிழக்கு பல்கலைக்கழக திருகோணமலை வளாகத்தின் கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் திங்கட் கிழமை முதல் வழமைக்கு திரும்பும் என வளாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த இரண்டு மாத காலமாக தடைப்பட்டிருந்த கல்வி நடவடிக்கைகளே இவ்வாறு வழமைக்கு திரும்ப இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு கல்வி நடவடிக்கைகள் தடைப்பட்டிருந்ததால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இதே வேளை தொடர்ந்து மூன்று மாதகாலமாக நடைபெற்று வரும் விரிவுரையாளர்களின் வேலைநிறுத்த போராட்டமும் மிக விரைவில் முடிவுக்கு கொண்டு வரப்படும் எனவும் நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இதே வேளை மிகவும் சிக்கலான நிலைமையில் தமது கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்து செல்ல முடியாமல் இருந்த திருமலை வளாக கணனி விஞ்ஞான துறையும் எதிர்வரும் திங்கட்கிழமை தமது கல்வி நடவடிக்கைகளை தொடர இருப்பதாக கணனி விஞ்ஞான கற்கை நெறி இணைப்பாளர் தெரிவித்தார்.

(பவாஸ்)

**Kiddies International Pre School**

பாடசாலை அனுமதிகள் வழங்கப்படும்

Enrollment is now on for Kids 2 ½ to 5 Years for nursery and play school and Evining English Classes and Elocution Classes.

## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள்

1. மணிக்கு 30km தூரம் செல்லும் முச்சக்கரவண்டி தரிப்பிடம் ஒன்றில் இருந்து காலை 8.30 இற்குப் புறப்பட்டு நண்பகல் 12.00 மணிக்கு உரிய இடத்தைச் சென்றடைந்தது எனின், வாகனம் சென்ற மொத்தத் தூரம் யாது?
   1. 105km   2. 90km   3. 135km

2. ஒரு மரத்தில் காய்த்திருந்த 1991 மாங்காய்களில் 809 மாங்காய்கள் பறித்தெடுக்கப்பட்டதெனின், எஞ்சியுள்ள மாங்காய்கள் எத்தனை?
   1. 1101   2. 1182   3. 1001

3. கலை நிகழ்ச்சி ஒன்றிற்காக 42டு பழச்சாறு கொண்டுவரப்பட்டது. அந்நிகழ்ச்சியின் பின்னர் 17டு 450அட மகுதியாகக் காணப்பட்டதெனின், பயன்படுத்தப்பட்ட பழச்சாறின் அளவு யாது?
   1. 24L 650ml   2. 14L 550ml   3. 24L 550ml

4. சாம்பல்தீவில் 214 வீடுகளும், சல்லியில் சாம்பல்தீவைப் போல் 1.5 மடங்கு வீடுகளும் அமைக்கப்பட்டன. எனின், இரண்டு இடங்களிலும் அமைக்கப்பட்ட மொத்த வீடுகளின் எண்ணக்கை யாது?
   1. 535   2. 3210   3. 321

5. சஞ்சு பிறந்த வருடம் 2007ம் ஆண்டு அது
   1. 20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி
   2. 21 ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதி
   3. 21 ஆம் நூற்றாண்டின் முதற் தசாப்தம்

6. "தங்கை" என்பதன் ஆங்கிலச் சொல்லினை குறியீட்டு வடிவில் எழுதினால் அடையக்கூடிய முறை?
   1. 345871   2. 343841   3. 343843

7. என்னிடம் மூன்று வகையான 8 தாள் காசுகள் இருந்தன. அவற்றின் மொத்தப் பெறுமதி ரூபா 220 ஆகும். அதன் படி என்னிடம் இருந்த தாள் காசுகளின் பெறுமதியும், எண்ணிக்கையும் யாது?
   1. ரூபா 20 தாள்கள் 3, ரூபா 50 தாள்கள் 2, ரூபா 10 தாள்கள் 3
   2. ரூபா 10 தாள்கள் 2, ரூபா 20 தாள்கள் 3, ரூபா 50 தாள்கள் 3
   3. ரூபா 10 தாள்கள் 3, ரூபா 20 தாள்கள் 2, ரூபா 50 தாள்கள் 3

8. 5009 இவ் எண்ணிற்கு முன், பின் வரும் எண்களை முறையே
   1. 5008, 5001   2. 5008, 5010   3. 5080, 5010

9. நான்முகி ஒன்றினதும், கனவுரு ஒன்றினதும் விளிம்புகளின் கூட்டுத்தொகை யாது?
   1. 18   2. 13   3. 16

10. 3 டசின் பென்சிலின் விலை ரூபா 288 எனின், 5 பென்சில்களின் விலை யாது?
   1. ரூ 15   2. ரூ 40   3. ரூ 96

11. ஒருவரின் அடக்க முடியாத கோபத்தை உணர்த்துவது?
   1. உள்ளங்கை நெல்லிக்கனி போல
   2. ஆலையில் அகப்பட்ட கரும்பு போல
   3. நீறு பூத்த நெருப்பு போல

12. அச்சுதன் இரவு பதினொரு மணியளவில் வீட்டில் தனியாக இருந்த போது மின்சாரம் தடைப்பட்டு வீடு முழுவதும் இருளில் மூழ்கியது. அப்பொழுது அச்சுதனின் மனதில் தோன்றிய மனவெழுச்சி யாதாக இருக்கும்?
   1. சினம்   2. மகிழ்ச்சி   3. அச்சம்

13. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களுள் மிகச் சரியான கருத்தைத் தருவது யாது?
   1. கொதித்தாறிய நீரைப் பருகுவதனால் நோய்கள் அதிகரிக்கும்.
   2. கொதித்த நீரைப் பருகுவதனால் குறையக்கூடும் நோய்கள்
   3. கொதித்தாறிய நீரைப் பருகுவதனால் நோய்கள் குறையும்.

14. குதிரையைக், கட்டுப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் பொருள் கடிவாளம் என்பது போல யானையைக் கட்டுப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் பொருள் யாது?
   1. தடி   2. கூடு   3. அங்குசம்

15. சாதகம் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்?
   1. எதிர்வு   2. பாதகம்   3. நன்மை

16. உப்புவளம் இல்லாத ஊர் எது?
   1. அம்பலாங்கொட   2. புத்தளம்   3. அம்பாந்தோட்ட

\- பிரதீபா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வாரம் சிவகுமாரன் இந்துஜன்

வாழ்க்கை எதையுமே சொல்லிவிட்டு தன்னை மாற்றிக் கொள்வதில்லை. அது தன்பாட்டில்தான் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. நாமும் கடலில் வீழ்ந்த துரும்பாய் அதன் திசைக்கு ஆடினாலும் எம்முள்ளான உறுதித்தன்மையை பேணுமிடத்தே எம் வெற்றி நிச்சயிக்கப்படுகிறது. அவ்வாறான வெற்றிகளை பெறும் உங்கள் அனைவரையும் மலைமுரசு ஏற்கத் தயாராக இருக்கின்றது. உங்கள் அறிமுகங்களும் இடம்பெற வேண்டுமானால் மலைமுரசுடன் தொடர்பு படுங்கள் என்று கூறி இவ்வாரம். தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் 2014 விஞ்ஞான பிரிவில் பயிலும் சிவகுமாரன் இந்துஜனை அறிமுகம் செய்கிறோம்.

சிறுவயதிலிருந்தே விஞ்ஞான துறையில் ஆர்வம் காட்டிவரும் இந்துஜன் அத்துறையில் மட்டுமல்லாது தமிழ், கணிதம், மற்றும் சாரணீய செயற்பாடுகளில் அதிகம் ஆர்வம் காட்டி வருகின்ற ஒருவர். உவர்மலை விவேகானந்தாப் பண்ணையில் வளர்ந்து வரும் இவர் தரம் 06 முதல் தான் பழகிய சூழலே விஞ்ஞான துறையில் தனது ஆர்வத்தை தூண்டியதாக குறிப்பிடுகிறார்.

தன்னுடைய வளர்ச்சியின் ஊன்றுகோலாய் என்றும் தன்னோடு நிற்பவர் தனது தாயார்தான் எனக் கூறும் இந்துஜன் தனக்கு கல்வி புகட்டிய அனைத்து ஆசிரியர்களுக்கும் நன்றி கூறுவதோடு. விஞ்ஞான ஆசிரியை வித்தியா, ஆங்கில ஆசிரியர்களான வினோதன் மற்றும் மங்களகௌரி ஆகியோரை மனத்திடத்துடன் பெயர்குறித்து நினைவு சொன்னார். அத்தோடு தனது பாடசாலையின் முன்னாள் அதிபர் சி. நவரெத்தினம் அவர்களை தன் வாழ்வில் மறக்க இயலாது எனக் கூறும் இந்துஜன் ஆர்வம் காட்டிய துறைகளும் வெற்றிகளும் பின்வருமாறு:

விஞ்ஞானம் - விஞ்ஞான வினாடி வினாப் போட்டிகள்
2008, 2010, 2011 வலயமட்டம் முதலாமிடம்
2008, 2010, 2011 மாகாணமட்டம் வெள்ளிப்பதக்கம்

தமிழ் மொழித்தினப் போட்டிகள்:
2010 கட்டுரை வரைதலும், இலக்கியம் நயத்தலும்
வலயமட்டம் முதலாமிடம்
மாவட்ட மட்டம் முதலாமிடம்
மாகாணமட்டம் இரண்டாமிடம்

2010 இலக்கண போட்டி
வலய, மாவட்ட, மாகாண மட்டம் முதலாமிடம்

சமூக விஞ்ஞான போட்டிகள்:
-2010 வலய மட்டம் - இரண்டாம் இடம்
மாவட்ட, மாகாண மட்டம் - முதலாமிடம்

கணித வினாடி வினா போட்டிகள்:
- 2011 வலய, மாவட்ட மட்டம் - முதலாமிடம்

சாரணீய செயற்பாடுகள் :
- 2007, 2008, 2009 திருக்கோணமலை மாவட்ட சிறந்த சாரணக்குறிப்பு புத்தகத்திற்கான விருது பெற்றமை.
- திருக்கோணமலை மாவட்ட சாரண வரலாற்றில் மூன்றாவதாக சாரணீயம் தொடர்பான நூல் 'குருளைச் சாரணர் பதிவேடு' தொகுத்து வெளியிட்டமை.

இவ்வாறு பலவகை துறைகளில் தன்னை மிளிரச் செய்தும், செய்து கொண்டும் இருக்கும் இந்துஜன் 2011 க.பொ.த.சாதாரண தர பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் முதலாமிடம் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கதே.

'விரும்பிய துறையை விருப்பத்துடன் கற்றல் மூலம் கல்விச் சாதனைகளை நிலைநாட்டலாம்' என்று உறுதியாய் கூறும் இந்துஜனை மேலும் பல சாதனைகளைப் படைக்க மலைமுரசு வாழ்த்துகின்றது.

- செம்பியன் -

## அவன் ஊமை அல்லன்

அவன் ஒட்டி உலர்ந்து போய்
இருக்கின்ற அந்த வயிற்றுப்பையை
நிரப்புவதற்காக
தோற்பை போர்த்திய
எலும்பும் சில நரம்புகளையும் கொண்ட
அந்த அழுக்குக் கரங்களில்
யாசகம் ஏற்கிறான்

உங்கள் வசைச் சொற்களையும்
உளறல்களையும் கேட்கவில்லை - ஏனெனில்
அவன் ஒரு செவிடன்

உங்கள் சுயநலச்சாயம் பூசிய செயல்களையும்
பொய்யை பிரதிபலிக்கும் முகங்களையும்
பார்க்கவில்லை - ஏனெனில்
அவன் ஒரு குருடன்

அவன் உடல் மரத்துப் போய்விட்டதாலோ
அல்லது நீங்கள் கொடுக்கும் வலிகளுக்கு
பிரதியீடு செய்ய சக்தி அற்றதாலோ
மௌனமாகவே இருக்கிறான்

ஆனால்
அவன் பேசக்கூடும்.....
ஏனெனில் அவன் ஊமை அல்லன்

-பத்ம பிரஷன்-
திருக்கோணமலை.

## முருகையனின் 'இதயத்தின் இளவேனில்' மொழிபெயர்ப்புத் தொகுப்பிலிருந்து இரு கவிதைகள்

### நச்சு மரம்

கோபம் கொண்டேன் தோழன் மீதில்
கோபம் சொன்னேன், குளிர்ந்து தீர்ந்தது
கோபம் கொண்டேன் தீய பகைவனில்
கூறினேன் அல்லேன், வளர்ந்தது கோபம்

அச்சத் துடனே அதற்கு நீர் வார்த்தேன்
அல்லும் பகலும் கண்ணீர் ஊற்றினேன்,
எத்தும் சூதும் இயைந்த முறுவலாம்
எறிக்கும் வெயிலை அதற்குப் பாய்ச்சினேன்.

அல்லும் பகலும் வளர்ந்து வளர்ந்தே
அழகிய அப்பிட் பழத்தைத் தந்தென்
இல்லில் இருந்ததை எதிரி கண்டான்,
என்பழம் என்பதும் அறிந்து கொண்டான்

இருட்டுச் சூழ்ந்ததும் தோட்டத் துள்ளே
எவரும் காணா வகையில் நுழைந்தான்
மரத்தின் கீழே காலையிற் கிடந்த
மாற்றான் உடலை மகிழ்வுடன் கண்டேன்.

வில்லியம் பிளேக்
(1757 - 1827)

### இருபதாம் நூற்றாண்டு

பல நூற்றாண்டுகளின் முன்
வெறுக்கும் பழக்கம் இல்லை எனக்கு
எனினும், கொடிய நாகத்தை நோக்கி
இளைப்பிலா ஈட்டியை நீட்ட வேண்டி வந்தது
தீயிடையிருந்து வாளினை இழுத்து
(வி)பாலன் புத்திகெட்ட படிமத்தின் எதிரே வீசி
இருபதாம் நூற்றாண்டின்
எலிஜாவாக வேண்டி வந்தது.

பல நூற்றாண்டுகளின் முன் எனக்கு
சவக்குழி தோண்டும் பழக்கமே இல்லை
ஆனால், இன்று என் இதயத்திருந்த
பொய்த் தேவுகளைச் சவுக்கினால் அடிக்கிறேன்
இருபதாம் நூற்றாண்டில் என்
மக்களை விற்ற பொய்த் தேவுகளை
பல நூற்றாண்டுகளின் முன் நான்
விருந்தினர் எவரையும் விரட்டியதில்லை
ஆனால், ஒரு நாள் காலை கண்களைத் திறந்தால்

என்னரும் பொருள்கள் எல்லாம் களவு போயிருந்தன
என்னுயிர்த் தோழன் தூக்கிலே தொங்கினான்

என்னிளம் பிள்ளையின் பிடரி முழுவதும்
இரத்தக் களரி

என் விருந்தினரின் துரோகம் உணர்ந்தேன்
என் கதவடியில் கண்ணிகள் புதைத்தேன்
கூர்வாள் மாட்டினேன்

என் சிறு கத்தியின் எஞ்சிய பகுதிமேல் ஆணையாய்
இருபதாம் நூற்றாண்டில்
இவ்விருந்தினரில் எவரும் என் வீட்டுள்
நுழைந்திடத் தகார் எனும் உறுதியைப் பூண்டேன்

பல நூற்றாண்டுகளின் முன்
நான் ஒரு கவிஞன்
கவிஞன் மட்டுமே
சித்தர்கள் பலரின் மத்தியில் இருந்தேன்
இன்று நான் இந்த இருபதாம் நூற்றாண்டில்
புரட்சி வெடிக்கும் எரிமலை ஆயினேன்.

சமீஹ் அல் காசிம் (1939)

## "ஆசிரியர் பிரதீபா பிரபா" விருதை வென்றார் ஆசிரியர் .அ. ஹரிஹரன்



மஹிந்த சிந்தனைக்கமைவாக தேசிய புனர்வாழ்வுச் செயற்றிட்டத்திற்கு ஏற்ப எதிர்காலச் சவால்களை எதிர்கொள்ளும் மாணவச் சமூகத்தை உருவாக்கும் உயிர்ப்புள்ள வகுப்பறையினை உருவாக்கி அதனுள் பயன்மிக்க கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுக்கும் ஆசிரியர்கள் அதிபர்களை கௌரவித்து வழங்கப்படும் விருதான "ஆசிரியர் பிரதீபா பிரபா" விருதை திருக்கோணமலை பெருந்தெரு விக்னேஸ்வரா மகாவித்தியாலய ஆசிரியரான திரு.அ.ஹரிஹரன் அவர்கள் இவ்வாண்டில் வென்றுள்ளார்.

இவ்விருது வழங்கும் நிகழ்வு 09.10.2012 செவ்வாய்க்கிழமையன்று 10 மணியளவில் மீபே கல்வித் தலைமைத்துவ அபிவிருத்தி நிலையத்தில் சனாதிபதியின் தலைமையில் நிகழவுள்ளது.

(மதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## The Sunday Leader

### மெனிக் அகதிமுகாமில் இராணுவத் தளமா?

த.தே கூட்டமைப்பின் கூற்றுப்படி வடக்கு மக்களை தற்போது வரை கொண்டிருந்த மெனிக் முகாமில் இராணுவ தளம் அமைக்கும் வேலைகள் நடைபெறுவதாக தெரியவந்துள்ளது. த.தே.கூ வின் சுரேஸ் பிரேம சந்திரன் அவ்வாறே தெரிவித்துள்ளார். அகதிகள் யாவரும் வெளியேற்றப்பட்டுள்ள நிலையில் மெனிக் முகாமை தமது தேவைக்கு தருமாறு இராணுவம் கோரியுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

செட்டிக்குளப் பிரதேச செயலரின் கூற்றுப்படி 6 மாதங்களுக்கு முன்னரேயே மெனிக் முகாமின் வலயம் 2ல் இராணுவப் பயிற்சி மையம் உருவாக்கப்பட்டு விட்டதாகவும் அப்பயிற்சி முகாம் சுமார் 250ஏக்கர் பரப்பளவானது எனவும் தெரிவித்துள்ளார். ஆனால் இராணுவப் பேச்சாளர் தாம் இராணுவ முகாமமைப்பதற்காக மெனிக் முகாமைக் கேட்கவில்லை என கூறியுள்ளார்.

### வாழ்க்கைச் செலவு 21,052 ரூபாவாக உயர்ந்துள்ளது.

2006ம் ஆண்டிலிருந்து தற்போது வரை வாழ்க்கைச் செலவானது ரூபா 21,052ஆக அதிகரித்துள்ளது என ஜே.வி.பி மத்திய குழு உறுப்பினர் லால்காந்த தெரிவித்துள்ளார்.

நான்கு உறுப்பினர்களைக் கொண்ட குடும்பமொன்றுக்கான மாதாந்த வாழ்க்கைச் செலவே இவ்வாறு 21,052ல் அதிகரித்துள்ளதாகவும் அதனை ஈடுசெய்ய அரச ஊழியருக்கு அரசு வழங்கும் கொடுப்பனவு வெறும் ரூபா 7,609.50 ஆலே அதிகரித்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

### இந்தியா நடுவராக வெயற்படாது

இலங்கை அரசிற்கும் த.தே.கூ விற்கும் இடையிலான பேச்சுக்களுக்கு நடுவராக இந்தியா தொழிற்படாது எனவும் ஆனால் பேச்சுக்களை நடாத்த தேவையான சூழலை உருவாக்கும் முயற்சிகளில் ஈடுபடும் எனவும் இந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது வரை இரு தரப்பும் ஓர் அரசியல் தீர்வுக்கு நகராததையிட்டு ஆழ்ந்த கரிசனையை இந்தியத் தரப்பு கொண்டுள்ளதுடன் அதனைக் கடந்த காலத்தில் இந்தியாவிற்கு வருகை தந்த சனாதிபதி மகிந்த ராசபக்ஸவுக்கும் தெரியப்படுத்தியிருந்தது. நம்பத்தகு வட்டாரங்களை மேற்கோள் காட்டி மேலும் தெரியவருவது யாதெனில் மக்கள் மீள்குடியமர்வு மற்றும் யுத்தத்தின் பின்னரான அபிவிருத்திப் பணிகளில் டெல்லி திருப்தியடைந்திருப்பதுடன் இலங்கையை அவ்விடயம் தொடர்பாக எந்த இடத்திலும் இந்தியா ஆதரவளிக்க தயாராயிருப்பதாயும் தெரிகிறது.

### ஆபத்தில் இந்துமதம்

அண்மையில் ஆண்டாண்டு காலமாக மிருகங்கள் பலியிடப்பட்டு வந்ததை தடைசெய்ய தொடர்ந்து கொழும்பின் இந்துப் பாடசாலைகள் சிலவற்றில் அனைத்து மாணவர்களுக்கும் பைபில்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறான நடவடிக்கைகளால் இந்துமதம் ஆபத்தை மேற்கொண்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. கட்டாயமாக பைபிளைக் கொண்டு செல்லும்படி மாணவர்கள் வற்புறுத்தப்பட்டதாக பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

### தண்டம் கட்டப்பணமின்றி 1200 பேர் சிறையில்

தண்டம் கட்ட வழியின்றி சுமார் 1200 பேர் சிறைச்சாலைகளில் இருப்பதாக சிறைச்சாலை ஆணையாளர் தெரிவித்தார். கட்டவேண்டிய தண்டப்பணம் சுமார் 20 மில்லியனாக இருக்க இவர்களை வைத்துப் பராமரிப்பதற்கு அதைவிட செலவாவதாய் அவர் தெரிவித்தார்.

### கொழும்பு சிறைச்சாலையில் தேடுதல்

வரலாற்றில் முதல் தடவையாக சுமார் 500 விசேட அதிரடிப் படையினரும், பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரும் கொழும்புத் தடுப்புச் சிறையில் மேற்கொண்ட தேடுதலில் 126 கையடக்க தொலைபேசிகளையும், 55 சிம் அட்டைகளையும், 44 மின்கலங்களையும், 38 மின்கல மின்னேற்றிகளையும், 20 காதில் இடும் தொடர்பாடல் கருவிகளையும், 5கிராம் ஹெரோயின் 40 பக்கற்றுகள் களையும் கைப்பற்றியுள்ளனர்.

## The Sunday Times:

### தெரு வலையமைப்பை நவீனமாக்க 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் சீனாவிலிருந்து.

வடக்கு தெற்கில் வீதி அபிவிருத்திக்கென 2ம் கட்டசெலவுகளுக்காக ரூபா 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடனுதவியை சீனா வழங்க முன்வந்துள்ளது. இதனடிப்படையில் 504.9 கி.மீற்றர் நீளமான பாதைகளை திருத்தும் 19 நிர்மான வேலைகளுக்கு இப்பணம் செலவிடப்பட்டுள்ளது.

### இலங்கையூடாக சீன சைக்கிள் ஏற்றுமதி – ஐரோப்பிய ஒன்றியம் கண்டுபிடிப்பு

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு சீனா நேரடியாக சைக்கிள்களை ஏற்றுமதி செய்ய மேலதிக வரியை ஐரோப்பிய ஒன்றியம் விதித்திருந்தது. அதிலிருந்து தப்பிக்கொள்ள அச்சைக்கிள்களை இலங்கையிலிருந்து உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதாக போலியான நடவடிக்கையொன்று பல வருடங்களாக நடைபெற்றிருப்பதை ஐ.ஒன்றியம் கண்டுபிடித்துள்ளது.

அதற்கான ஆட்சேபத்தையும் தகவல்களையும் பிரான்ஸ் உள்ள இலங்கை தூதரகத்திடம் ஐ.ஒன்றியம் கையளித்துள்ளது. இக்குற்றச்சாட்டை விசாரிப்பதாக இலங்கை தூதரகம் அறிவித்துள்ளது.

### சர்வதேச நாணய நிதியத்தினர் இலங்கையில்

வாசிங்கனைத் தளமாகக் கொண்ட I.M.F அலுவலர்கள் பொருளாதார மீள்பார்வைக்காக இலங்கைவரவுள்ளனர். அவர்களுடன் மேலதிக கடன்வசதி பற்றி ஏதும் கதைக்கப்போவதில்லை என மத்திய வங்கியின் ஆளுனர் அனுவத் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார். இப்பயணம் ஓர் சாதாரண பயணம் என தெரிவித்துள்ள அவர் இலங்கை ரூபாவை டொலருக்கு எதிராக மிதக்க விட்டமையால் எழுந்த விளைவுகள் பற்றி ஆராயவே இவர்கள் வரவுள்ளதாக தெரிவித்தார்.

### ஜமாலியா முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் முப்பெரும் விழா




திருக்கோணமலை ஜமாலியா முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டும், ஆசிரியர் தினம் மற்றும் சிறுவர் தினம் ஆகியவற்றை முன்னிட்டும் மாபெரும் முப்பெருரும் விழா 5.10.2012 வெள்ளிக்கிழமை காலை 8.40 மணியளவில் வித்தியாலய அதிபர் ஜனாப் ஆ. முஹாஸ் தலைமையில் நடைபெற்றது. இம் முப்பெரும் விழாவின் முக்கிய நிகழ்வாக வித்தியாலய மாணவர்களின் விழிப்புணர்வு ஊர்வலம் இடம்பெற்றது. திருகோணமலை நகரசபைத் தலைவர் க. செல்வராஜா (சுப்ரா) இந்நிகழ்வின் முதன்மை அதிதியாகவும் சிறப்பு அதிதியாக வலையக்கல்வி ஆரம்பப் பிரிவு ஆசிரியர் ஆலோசகர் திருமதி. உதயகுமார், திருகோணமலை நகரசபை உறுப்பினர் நூர் முகமட் ஆகியோர் கலந்து சிறப்பிப்பதையும் அங்கு நடைபெற்ற ஊர்வலத்தையும், ஆரம்ப நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.

படங்கள் - அ. அச்சுதன்

### உள் ஆடைக்குள் தேவாங்கு! எப்படி முடிகிறது இவர்களால்?



தேவாங்கு குட்டிகளை உள்ளாடைக்குள் மறைத்து வைத்து வெளிநாட்டிற்கு கொண்டுச்செல்ல முற்பட்ட மூன்று நபர்களை டெல்லி இந்திராகாந்தி விமான நிலையத்தில் பொலிஸார் கைது செய்துள்ளனர்விமானம் தரை இறங்கியபோது குறிப்பிட்ட நபர்களை சோதனை செய்த பொலிஸார் அவர்களிடம் இருந்த தேவாங்கு குட்டிகளை கைப்பற்றியதுடன் மேற்படி நபர்களையும் கைது செய்துள்ளனர்.

### ஏவாளின் மார்பால் இல்லாமல் போனது கேலிச்சித்திரம்



ஆதாம் ஏவாள் கேலிச்சித்திரத்தில் ஏவாளின் உருவமானது மார்பகம் வெளித்தெரியும் வகையில் வரையப்பட்டதாகக் கூறி, பேஸ்புக் இணையத்தளமானது அதனை தடைசெய்துள்ளது. இச்சித்திரம் பேஸ்புக் இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட நிலையில், பாலியல் படங்களை பதிவேற்றம் செய்வது தொடர்பிலான பேஸ்புக் இணையத்தளத்தின் விதிமுறைகளை மீறும் வகையில் மேற்படி வரைபடம் காணப்பட்டதாலேயே பேஸ்புக் வலைத்தளம் நீக்கியுள்ளது

# தூய குவாடலுப்பே அன்னையின் திருவிழா



திருகோணமலை நகரில் பிரசித்தி பெற்று காணப்படுகின்ற தூய குவாடலுப்பே அன்னை திருத்தலத்தின் வருடாந்த திருவிழாவானது 21.09.2012 அன்று கொடியேற்றத்துடன் மிக விமர்சையான முறையில் ஆரம்பமாகி நிறைவுற்றது. ஆரம்பத் திருவிழாவின் திருப்பலியினை அருட்பணி S.ஜெயராஜ் சூஞ்சு O.M.S அவர்களால் ஒப்புக் கொடுக்கப்பட்டது. அன்னையின் பத்து நாட்கள் கொண்ட திருவிழாவில் முதல் எட்டு நாட்களும் நவநாள் திருப்பலியாக காணப்பட்டதுடன் ஒன்பதாம் நாள் அன்னை திருச்சொரூபம் ஊர்வலமாக வீதிவலம் வந்தது. தொடர்ந்து நற்கருனை ஆண்டவரின் ஆசியும், வழிபாடும் அருட்பணி T. கிங்ஸிலி றொபர்ட் அவர்களால் ஒப்புக் கொடுக்கப்பட்டது. மறுநாள் திருவிழா திருப்பலியினை மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் அதி.வண.மேதகு ஜோசப் பொன்னையா ஆண்டகை தலைமையேற்று நடாத்திவைத்தார். 29.09.2012 சனிக்கிழமை அன்று பிள்ளைகளுக்கு திவ்விய நற்கருணையும், உறுதிபூசுதலும் அவரால் வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோணமலையில் "புத்தாக்கக் கம்பீரக் கண்காட்சி...

அதற்குப் புறம்பாக விவசாயத் திணைக்களம், கால்நடை அபிவிருத்தித் திணைக்களம், டயலொக் கம்பனி, ஸ்ரீலங்கா ரெலிகொம், இலங்கை மற்றும் மக்கள் வங்கி ஆகியனவும் தமது கூடங்களை நிறுவியிருந்தன.

ஒவ்வொரு பாடசாலையும் ஆகக் குறைந்தது 5 ஆக்கங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் எனக் கோரப்பட்டிருந்த போதும் அவையனைத்தையும் காட்சிப் படுத்த முடியாத நிலை தோன்றியிருந ததாக ஆசிரியர்களி சிலர் தெரிவித்தனர். மாணவர்களின் தனிப்பட்ட பணச்செல வில் உருவாக்கப்பட்ட காட்சிப்படுத்தற் பொருட்கள் இடவசதியின்மையால் காட்சிக்கு வைக்கப்படாமல் போய்விட்டதாகவும் மாணவர்கள் கவலை தெரிவித்திருந்தனர்.

## ஹக்கீமின் முடிவை...

வாக்களிப்பிற்கான தலைப்பாக " கிழக்கு மாகாண சபை நிர்வாகத்தை ஐக்கிய மக்கள் சுதந்திர முண்ணனியுடன் இணைந்து உருவாக்கியது சரியானதா?" என இப் பத்திரிகை கேட்டிருந்தது.

இவ் வாக்களிப்பில் பங்குபற்றிய பெரும்பான்மை வாக்காளர்கள் ஹக்கீமின் முடிவு தவறானது எனத் தீர்ப்பளித்துள்ளனர். வாக்களிப்பில் பங்குபற்றிய இலத்திரனியல் வாசகர்களில் 64.2 வீதமான மக்கள் ஹக்கீமின் முடிவு ஏற்றுக்கொள்ளத்தக்க தல்ல என்றும் 28.8 வீதமான மக்கள் ஏற்றுக் கொள்ளத்தக்கது என்றும் 7 வீதமான மக்கள் கருத்துச் சொல்லத்த தயங்கியவர்களாகவும் காணப்பட்டதை இப் பத்திரிகை வெளிக்காட்டியுள்ளது.

## காற்றழித்த வீடுகளைப்...

நெடுநேரம் இடம் பெற்ற இக் காலநிலைப் போரால் மணியரசன் குளப்பிரதேசம் மோசமான சேதத்துக் குள்ளானதோடு அப்பிரேதேசத்தைச் சேர்ந்த சுமார் முப்பது வீடுகளும் சேதமாகிப் போயின.

இத் திடீர் அசம்பாவிதத்தை கிழக்கு மாகாண முதல்வர் மற்றும் கிண்ணியா பிரதேச செயலாளர் ஆகியோர் நேரில் பார்வையிட்டு பாதிக்க பட்ட மக்களின் குறைகளை கேட்டறிந்தனர். மேலும் மக்களுக்கு தேவையான நிவாரண உதவிகளை வழங்கும் செயற்பாடும் மாகாண முதல்வரால் முடுக்கிவிடப்பட்டது.

## பெருந்தெரு விக்நேஸ்வரா...

(Projector), அதற்கான திரை உட்பட அதனுடன் தேவையான அனைத்துப் பொருட்களும் களவாடப்பட்டுள்ள நிலையில் எப்போது இக் களவு நிகழ்ந்துள்ளது என்பதைக் கண்டறிய முடியாதிருப்பதாகப் பாடசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

காவல்த்துறைக்கு உடனடியாக இவ்விடயம் தெரியப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து திருக்கோணமலைப் பிரதான காவல்துறை பிரிவு அலுவலர்கள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன் வாக்குமூலங்களையும் பதிந்தள்ளனர்.

**பிரிந்தழிய நினைக்கும் தமிழ்த் தலைமைகளே**
**வாக்களித்த இவர்களுக்கு என்ன சொல்லப் போகின்றீர்கள்?**



## குடும்பத் தகராறினால்...

நிகழ்ந்துள்ளதே பெரும் சோகமயமானதாகும்.

குடும்பத் தகராறினால் அயல் வீட்டு வயோதிபர் ஒருவரினால் இக்கொலை நிகழ்த்தப்பட்டுள்ளது. சுமார் 60 வயது மதிக்கத்தக்க வயோதிபரான அயல்வீட்டாருடன் கொலையுண்ட சிறுமியின் குடும்பம் முன்னர் நல்ல உறவைக் கொண்டிருந்த போதிலும் பின்னர் கடந்த சில வருடங்களாக பகை கொண்டிருந்தது. அப்பகையின் காரணமாக கடந்த மாதங்களில் அவ் வயோதிபருக்கு எதிராக கொலையுண்ட குழந்தையின் தகப்பனால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்ததாக எமது செய்தியாளர் தெரிவித்தார். அவ் வழக்கு விசாரணைகளுக்காக இவ் வயோதிபர் பல தடவை காவல்துறையினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டி ருந்ததாகவும் ஒரு தடவை கொலையுண்ட அச்சிறு குழந்தை இவ் வயோதிபருக்கெதிராக சாட்சியளித்திருந ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் இவ் வழக்கு விசாரணை களுக்குப் பின்னரும் அக் குழந்தை பாசத்துடன் இவ் வயோதிபருடன் பழகி வந்துள்ளதும் தெரியவந்துள்ளது.

இக்குழந்தைகளின் தாயார் தற்போது வெளிநாடொன்றில் பணிப்பெண்ணாகத் தொழிலாற்றி வருகின்றார். மூன்று குழந்தைகளைக் கொண்ட இக் குடும்பத்தில் கடைசியிரு குழந்தைகளும் பெண் குழந்தைகளாகும்.

சம்பவ தினம் இக்குழந்தை களின் தகப்பனும் பதின்மூன்று வயதான மூத்த சகோதரனும் வெளியே சென்றிருந்ததைக் கண்ணுற்ற அயல் வீட்டு வயோதிபர் வயலுக்குத் தெளிக்கும் மருந்துப் போத்தலையும் தன்னுடன் எடுத்துக்கொண்டு இச் சிறுமிகள் இருவரையும் விளையாட அழைத்துள்ளார். அவர்களும் வயதான மனிதனுடன் விளையாட விரும்பவே அருகிலுள்ள காட்டுப்பகுதிக்கு அழைத்துச் சென்று 08 வயதுச் சிறுமியைக் கூரிய ஆயுதமொன்றால் கையிலும், கழுத்திலும் வெட்டிக் கொலைசெய்ததாகவும் மற்றைய குழந்தையைக் கொலை செய்ய முயற்சித்த வேளையில் அப் பதினொரு வயதுப் பெண் குழந்தை தப்பியோடி விட்டதாகவும் அங்கிருந்த கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இக் கொலையைத் தொடர்ந்து தன்னுடன் எடுத்துச் சென்ற பூச்சிக்கொல்லியினை அருந்தி கொலையாளி தற்கொலை செய்துகொண்டதாகவும் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. கொலையுண்ட குழந்தையினதும் தற்கொலை செய்து கொண்ட மனிதனினதும் சடலங்கள் திருக்கோணமலை வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு பிரேத பரிசோதனைகள் நிகழ்த்தப்பட்ட பின் அடக்கம் செய்வதற்காக உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன. கடந்த ஞாயிற்றுக்கிழமை திரியாய் ஏத்தனடி மயானத்தில் காவல்த்துறைப் பாதுகாப்புடன் உடலங்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன.

குச்சவெளி காவல்துறையினர் மேலதிக விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஸ்ரீவாணி வித்தியாலயத்தின்...

தொடக்கி வைக்கும் நிகழ்வு திங்கட்கிழமை 01.10.2012 நடைபெற்றது. திருக்கோணமலை கல்வி வலயத்தில் பட்டணமும் சூழலும் பிரதேச செயலகத்தில் ஏழு பாடசாலைகள் இத்திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொரு பாடசாலைக்கும் 500,000.00 ரூபாய்கள் வழங்கப்பட்டுள்ளது.

பாலையூற்று ஸ்ரீ வாணி வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள சுற்றுமதில், திறந்த வெளி மேடை என்பன திங்கட்கிழமை 01.10.2012 காலை திறந்து வைக்கப்பட்டது. திருக்கோணமலை வல்யக் கல்வி பணிப்பாளர் ந.விஜேந்திரனின் அழைப்பில் கடற்தொழில் நீரியல் வளத்துறை பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே இதனை திறந்து வைத்தார்.

இவ் வைபவத்தில் கிழக்கு மாகாண கல்வி திணைக்கள மேலதிக மாகாண கல்வி பணிப்பாளர் எஸ்.கிருஸ் ணானந்தராஜா, பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் திருமதி சசிதேவி ஜலதீபன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

திருகோணமலை கல்வி. வலயத்தில் பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவில் திஸ்ஸ வித்தியா லயம், அபயபுரம் கனிஸ்ட வித்தியா லயம். பாலையூற்று புனித லூட்ஸ் வித்தி யாலயம், பாலையூற்று ஸ்ரீ வாணி வித்தி யாலயம், சங்கமம் மாதிரி பாடசாலை, மட்கோவ் அல் மதீனா பாடசாலை, சின்னப்பிள்ளைச்சேனை அல் புர்கான் வித்தியாலயம் என்பன தெரிவு செய்யப்பட்டுள்ள ஏனைய பாடசாலைகள் ஆகும்.

## குணா கல்வி நிலைய...

நகரசபை மண்டபத்தில் நடைபெற உள்ளது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர். திரு. க. துரைரெட்ணசிங்கம் அவர்களும் சிறப்பு விருந்தினராக நகரபிதா திரு. க.செல்வராஜா அவர்களும் கலந்து சிறப்பிக்க உள்ளனர் என நிர்வாகி திரு. A.செல்வேந்திரன் தெரிவித்தார்.

வெட்டுப்புள்ளிகளை விடக் கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர் விபரம்.

வ.காயத்திரி-164, ச.பிரதிக்ஷன்-163
ஜெ.ஜனேந்தன்-160, க.விதுர்ஷா-159
நா.லிதுஷன்-158, வீ.பாத்திமா-156
அ.சமீஹா-151, வி.ஷிரோன்-147
யு.டிவேஜிகன்-148

SS DIGITAL'S
Specialist in Digital Colour Printing
அச்சுத் தேவைக்கான தீர்வு
நியாய விலையில், விரைவான மற்றும் தரமான சேவை.
அனைத்து விதமான அச்சிடல் வேலைகளும்
A6,A5,A4,A3
கலர் லேசர் பிறின்டிங், கலர் போட்டோ கொப்பி
டைப் செட்டிங் & கிரபிக்ஸ் டிசைனிங்
உங்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதே
எமது ஒரே குறிக்கோள்
Con: 026-2224933, & ssdigitals.shan@gmail.com
No 58, Vidyalayam Road, Trincomalee.

## திருமலையில் பெண்...

பெற்ற பலர் பட்டதாரிகளாகவும் பட்டம் பெற்று வெளியேறி இருக்கின்றார்கள். அதுபோன்று இந்தப் பயிற்சி பெறும் பெண்களாகிய நீங்களும் ஆற்றலும் ஆளுமையுமுள்ள ஊடகவியலா ளர்களாக இருந்து சமூகத்தின் குரலாக செயற்படுவீர்கள் என்று நம்புகின்றேன்" என்றார்.

இந்நிகழ்வில் யூ.எஸ்.எயிட் நிறுவனத்தின் திருகோணமலை மாவட்ட திட்ட அலுவலர் திருமதி பிரியா பகீரதனும் கலந்து கொண்டு ஊடகத் துறையில் பெண்களின் பங்கும் பணியும் பற்றிய முக்கியத்துவத்தை எடுத்து விளக்கினார்.

திருகோணமலை யூ.எஸ்.எயிட் நிறுவன அலுவலகத்தில் இடம்பெற்ற இந்த மூன்று நாள் வானொலி நிகழ்ச்சித் தயாரிப்புப் பயிற்சி நெறிகளை இன்ரநியூஸ் மட்டக்களப்பு ஊடக இல்ல முன்னாள் பணிப்பாளரும் வளவியலா ளருமான ஏ.எச்.ஏ. ஹுஸைன் மற்றும் கொத்மலை சமூக வானொலியின் முன்னாள் நிகழ்ச்சித் தயாரிப்பாளரும் அறிவிப்பாளருமான பி.பவிதரன் ஆகியோர் நடாத்தி முடித்தனர்.

## திருக்கோணேஸ்வரத்திலிருந்து...

கண்ட முருகனின் அற்புதங்களை எடுத்துரைத்த போது உடலும் உள்ளமும் புளகாங்கிதமடைந்தது. அரோகரா ஒலி எங்கும் ஒலித்தது. உதாரணத்திற்கு ஒரு விடயத்தை மட்டும் இங்கே குறிப்பிடலாம். மூதூரிலிருந்து புறப்பட்டு அங்குள்ள கிராமங்களினூடாகவே இவ்வேல் நடை பஜனை சென்று வெருகலை அடையும். அவ்வாறு செல்லும் போது ஒரு கிராமத்து மக்கள் தமது நாதம்பிரான் ஆலயத்திற்கும் வந்து செல்லுமாறு வேண்டிக் கொண்டதன் பிரகாரம் அங்கு சென்றதாகவும் அங்கு புற்றையே மக்கள் கோயிலாக வணங்குவதைக் கண்டதாகவும் தமது பஜனைக் குழுவினர் அங்கு பஜனை செய்து வணங்கிய போது புற்றிலிருந்த ஒரு பாம்பு வெளியே வந்து தமக்கு தரிசனம் தந்ததாகவும் கூறினார்.

எத்தனையோ இன்னலுக்கு மத்தியில் புறப்பட்ட இந்த வேல் நடை பஜனை இந்த 11ம் ஆண்டிலும் தன் நடையைத் தொடர்கிறது.






இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியில் 05.10.2012 அன்று இடம்பெற்ற ஆசிரியர் தின நிகழ்வின் போது எடுக்கப்பட்ட நிழற்படங்கள்

இப் பத்திரிகை, ஸ்ரீராம் பிரதர்ஸ் (பிறைவேட்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் திருக்கோணமலை வித்தியாலய வீதியில் 58ம் இலக்கத்திலுள்ள எஸ். எஸ். டிஜிட்டல்ஸ் இல் 07. 10. 2012ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org